பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 26 செவ்வாய்க்கிழமை 12.12.2023 கதிர் 396

# வற் வரியை அதிகரிக்கும் சட்டமூலம் நிறைவேற்றம்

## 95 பொருகளின் விலைகள் அதிகரிக்கும்

பெறுமதி சேர் வரி (திருத்தச்) சட்டமூலம் நேற்று 45 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. வற் வரியை 18 சதவீதமாக அதிகரிக்கும் இந்தச் சட்டமூலத்திற்கு ஆதரவாக 100 பேர் வாக்களித்தனர். எதிராக 45 பேர் வாக்களித்தனர். எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பு, கூச்சல் குழப்பங்களுக்கு மத்தியில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்தப் புதிய சட்டத்தின் ஊடாக 95 பெருட்களுக்கான வரி விதிக்கப்பட்டுள்ளது.

பெறுமதிசேர் வரி (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் வாசிப்புக்கள் மீதான விவாதத்திற்கு இரவு 8 மணிவரைநேரம்சபாநாயகர் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

அடுத்த வருடம் தேர்தல் என்று அறிவித்துவிட்டாலும் ஜனாதிபதி ரணிலுக்கும் கட்சிக்கும் எந்தத் தேர்தலை எப்படி எதிர்கொள்வது என்பதில் கடும் குழப்பம் நிலவுகின்றது. ஒருவேளை முதலில் ஜனாதிபதத் தேர்தலை நடத்துவது என்றால், அதில் பெரமுனவின் ஆதரவின்றி ரணிலால் வெற்றிபெறக்கூடிய வாய்ப்புக்கள் மிகக் குறைவே என்று அவரது ஐக்கிய தேசியக் கட்சியினரே கருதுகின்றனர். அப்படிப்பட்ட நிலையில் தேர்தலில் போட்டியிடாமல் ரணில் ஒதுங்கிக்கொள்ளக்கூடும் என்கிற எதிர்பார்ப்பும் உள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியிடாவிட்டால் என்ன செய்வது என்பதே கட்சியில் அண்மைக் ☞ 2

வற் வரி அதிகரிப்பினால்

## பெற்றோல், டீசலின் விலை அதிகரிக்கும்


ஐக்கிய ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர் ஆனந்த பாலித்த தெரிவித்தார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெற்றோல் டீசல் சமையல் எரிவாயு ஆகியவற்றுக்கு விதிக்கப்பட்டுள்ள வரி காரணமாக அவற்றின் விலைகள் வெகுவாக அதிகரிக்க உள்ளன. குறிப்பாக பூச்சியத்தில் இருந்து 18 சதவீதம் வரையிலான அதிகரிப்பை இந்த ☞ 2

# இமயமலைப் பிரகடனம் சம்பந்தரிடம் கையளிப்பு

## ஹக்கீம், ஜீவனும் உடனிருந்தனர்



சிறந்த இலங்கைக் கான சங்க மன்றம் மற்றும் உலகத்தமிழர் பேரவை ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெரும் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று மாலை கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின் போது, ☞ 8

# பொது நூலக சேவைக்கும் வற் வரி அதிகரிப்பு – ஹர்ஷ

பொது நூலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும் சேவைகளுக்கும் வற்வரி அதிகரிக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

வற்வரி திருத்தச்சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து ஊடகங்களுக்கு கருத்துவெளியிடும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:



இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட 137 பொருட்களில் 97 பொருட்கள் நீக்கப்பட்டுள்ளன. ஆயுர்வேதத்தோடு தொடர்புடையவற்றை மாத்திரம் நாம் கூச்சலிட்டு வரி அற்ற பட்டியலுக்குள் கொண்டு வந்தோம். பெற்றோல் டீசல் சமையல் எரிவாயு ☞ 2

# நெல் விளைச்சலில் தன்னிறைவு இருப்பினும் அரிசி இறக்குமதி

## அரிசி ஆலையாளர்களே காரணம் என்கிறார் அமைச்சர்

நெல் விளைச்சலில் தன்னிறைவு அடைந்துள்ளோம். அரிசி ஆலையாளர்கள் அவற்றை முழுமையாக சந்தைக்கு விடாத காரணத்தால் வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது என்று கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில் கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் இடம்பெற்றது. ஏனைய அமைச்சுகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த குற்றச்சாட்டுகளுடன் நிறைவேற்றப்பட்டது.

அவை அனைத்தும் கடந்த காலங்களில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பான ☞ 2

# மீனவர் வாழ்வை உயர்த்தவே புதிய மீன்பிடிச் சட்டமூலம்

## என்கிறார் அமைச்சர் டக்ளஸ்

மீனவ சமூகத்தினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் மீன்பிடி சட்டமூலத்தை முன்வைப்பார் என்று கடற்றொழில் அமைச்சர் டக்லஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் கடற்றொழில் அமைச்சின் செலவினத் தலைப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மீன்பிடி சட்ட மூலத்தை முதலில் தயாரித்து ☞ 8

# யாழ். பல்கலை கலைப்பீட ஒன்றிய முன்னாள் தலைவரிடம் விசாரணை

## பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு நடவடிக்கை

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவரான இராசுரத்தினம் தர்ஷனிடம் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் விசாரணை நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பயங்கரவாததடுப்புப் பிரிவினர் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அலுவலகத்தில் வைத்து சுமார் 4 மணித்தியாலங்களுக்கும் மேலாக விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

விசாரணை காலை 10 மணிக்கு ஆரம்பமாகி 2.30 வரை தொடர்ச்சியாக இடம்பெற்றுள்ளது.

2022ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வி ை ன ☞ 8

# பல்கலைக்கழங்களை 2 அல்லது 3 மடங்கினால் அதிகரிக்க எதிர்பார்ப்பு

## இப்படிச் சொல்கிறார் ஜனாதிபதி

பல்கலைக்கழகங்களின்எண்ணிக்கையை இரண்டு அல்லது மூன்று மடங்கினால் அதிகரிக்க நாம் எதிர்பார்க்கிறோம். அதனால் புதிய தொழில்நுட்ப கல்வியுடன் வெளிநாட்டுப்பல்கலைக் கழகங்களின் பட்டங்களையும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு மாணவர்களுக்குக் கிடைக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

நாட்டை அபிவிருத்திக்கு இட்டுச்செல்வதற்கு அறிவாற்றல் மிக்க மனித வளம் தேவைஎன்றுதெரிவித்த ஜனாதிபதி, இலங்கையில் பல்கலைக்கழகத் துறை மற்றும் தொழில் ☞ 9

# தபால் ஊளியர்கள் 27,000 பேர் நள்ளிவரவு வரை பணி நிறுத்தம்

நாடளாவிய ரீதியில் தபால் ஊழியர்களினால் ஆரம்பிக்கப்பட்ட அடையாள பணிப்பகிஷ்கரிப்பு நேற்று மாலை தொடங்கியது; இன்று நள்ளிரவு வரை தொடரும்.

தபால் திணைக்களத்திற்கு சொந்தமான கட்டடங்களை வெளிநாட்டுநிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படுவதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியின் இணை ஏற்பாட்டாளர் சிந்தக்க பண்டார தெரிவித்தார்.

27000 தபால் ஊழியர்கள் இந்த அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர் அவர் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் ஜனவரிமாதம்முதல் அரச ஊழியர்களுக்கு 20,000 ரூபா சம்பள ☞ 2

# ரணிலும் சஜித்தும் ஒருபோதும் அரசியலில் இணையமாட்டார்

## நாடாளுமன்றில் சஜித் நேற்றுத் திட்டவட்டம்

ஜனாதிபதி ரணிலும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித்தும் ஒன்று சேரப்போகிறார்கள் பொய்ப் பிரசாரம் மேற்கொண்டு வருகின்றன. ரணிலும் சஜித்தும் ஒருபோதும் இணைய மாட்டார்கள்.

இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் திங்கட்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

ஒருசிலபொய்ச்செய்திகளை வெளிப்படுத்திவரும் நிறுவனங்கள் ஒன்றிணைந்து ஆளும் தரப்பிடம் பணம் பெற்றுக்கொண்டு, ரணிலும் சஜித்தும் இணையப்போகின்றனர் என்று பரப்புரை செய்து வருகின்றன.

இது உண்மைக்குப் புறம்பான செய்தி. ரணிலும் சஜித்தும் ஒருபோதும் இணையப் போவதில்லை ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

காலங்களில்நடக்கும்விவாதங்களின் பிரதான பொருளாக மாறியுள்ளது. அப்படி ரணில் போட்டியிடவில்லை என்றால், ஜனாதிபதித் தேர்தலில் அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்துமுன்னிறுத்தக்கூடிய நபர் யார் என்பது தொடர்பில் நீண்ட கலந்துரையாடல் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மட்டுமல்ல ஆளும் தரப்புக்குள்ளும்இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

ரணில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் தமக்கு பெரும் சந்தேகம் இருப்பதாக கலந்துரையாடல் மேசையில் அமர்ந்திருந்த ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

இதன்படி, ரணில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடாவிட்டால் ஆளும் கட்சியால் முன்னிறுத்தப்படக்கூடிய வேட்பாளரின் பெயர் குறித்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. இந்த அரசியல் பிரமுகர் நீண்ட நாட்களாக ஜனாதிபதிப் பதவிக்காகக் கனவு கண்டுகொண்டிருந்தார் என்பது அரசியல் களம் அறிந்த கதை. இவர் அனைத்துஅரசியல்குழுக்களுடனும் பேசும் நபர் என்றும் அவர் அறியப்படுகிறார். எவ்வாறாயினும், அமைச்சர்களான நிமல் சிறிபால மற்றும் மகிந்த அமரவீர ஆகியோர் இந்தவேட்பாளரைவிரும்பவில்லை என்றும் கூறப்படுகின்றது. அப்படி இருந்தும் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து சந்திரிகாவைத் தலைவராகக் கொண்டு அரசியல் கூட்டணி அமைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தற்போது அவர்கள் இருப்பது தெளிவாகத் தெரிகிறது.

தற்போதைய வடமேற்கு ஆளுநரான லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தொடர்பில் கடந்த சில நாட்களாக மொட்டுக் கட்சியின் செயற்படும் தலைவராகக் கருதப்படும் பஸில் ராஜபக்ஷவிடம் குருநாகல் மற்றும் புத்தளத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெரமுனவின் சபை உறுப்பினர்கள் பல முறைப்பாடுகளை முன்வைத்துள்ளனர். ஜனாதிபதியுடன் மிகவும் நட்புடன் கூடிய மொட்டுவின் நாடாளுமன்ற உறுப்பினராகக் கருதப்படும் நிமல் லான்சாவுடன் லக்ஷமன் யாப்பா தற்போது நெருக்கமாகசெயற்பட்டுவருகின்றார் என்றும், ரணிலை மீண்டும் ஜனாதிபதியாக்கும் முயற்சியில் நிமல் லான்சா ஈடுபட்டுள்ளவர் எனவும் அங்கு பஸிலிடம் சுட்டிக்காட்டியிருந்தனர்.

ஜனாதிபதிக்கு ஆதரவாக மொட்டுக் கட்சியின் உறுப்பினர்களைத் திரட்டுவதிலும் தற்போது லான்சா முழுமுயற்சிசெய்துவருகின்றாராம். இது தவிர வடமேல் மாகாணத்தில் உள்ள மொட்டுக் கட்சி பிரதேச சபை உறுப்பினர்களும் லக்ஷமன் யாப்பா தொடர்பில் பசிலுக்கு பல முறைப்பாடுகளை முன்வைக்க நடவடிக்கை எடுத்திருந்தனர்.

பொதுவாக, லக்ஷமன் யாப்பா பஸிலுக்கு மிகவும் ஆதரவான நபராகக் கருதப்படுகிறார். பசிலில் பொருளாதார அலுவல்கள் அமைச்சராக இருந்த காலத்தில் லக்ஷமன் யாப்பா அவரது பிரதி அமைச்சராக இருந்தார். பொதுத் தேர்தலில் லக்ஷமன் யாப்பா தோற்கடிக்கப்பட்டபோதும், நிதி அமைச்சரின் ஆலோசகராக அவரைத் தன்னுடன் நெருக்கமாக வைத்துக்கொண்டார் பஸில். அத்துடன், ஆளுநர் நியமனத்தில் வடமேற்கிற்குலக்ஷமன்யாப்பாவின் பெயரை முன்மொழிந்தவரும் பஸில்தான்.

இதனால் லக்ஷமன் யாப்பா தொடர்பில் தொடர்ச்சியான முறைப்பாடுகள் எழுந்ததை அடுத்து லக்ஷமன் யாப்பாவின் மகன் பசந்த யாப்பா அபேவர்தனவுடன் பஸில் இதுதொடர்பில்கலந்துரையாடினார். பசந்த யாப்பா தற்போது சதொசவின் தலைவராகக் கடமையாற்றி வருகின்றார்.

தந்தையுடன் பேசி இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும்படி மகனுக்கு பஸில் கட்டளையிட்டார். இதேவேளை, மொட்டை உடைக்கும் வேலையில் ஈடுபட்டு வரும் லான்சாவுடன் பலத்த நட்பைக் கொண்டுள்ளார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள லக்ஷமன் யாப்பா, பஸிலுக்கு எதிரானவராகக் கருதப்படும் நபரான கீதா குமாரசிங்கவைபுதியகூட்டணிக்குள் கொண்டுவருவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்றும் கடைசியாக பஸிலிடம் போட்டுக் கொடுக்கப்பட்டுள்ளதாம். இதனால் லன்ஸா மீது கடும் கடுப்பில் உள்ளாராம் பஸில்.

இப்படி அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் ரணிலை அல்லது புதியவரா என்பதைத் தீர்மானிக்க முடியாமல் கிடந்த அல்லாடுகின்றன ஐக்கிய தேசியக் கட்சியும் ஆளும் தரப்பும்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## வற் வரியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்த நிலையில் மாலை 4.30 மணிக்கே வாக்கெடுப்பு நடத்தப்பட்டதால் சபையில் பெரும் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.

பெறுமதி சேர்வரி (திருத்தச்) சட்டமூலம், நிதிச் சட்டமூலம் ஆகியவைதொடர்பானஇரண்டாவது மதிப்பீட்டு விவாதத்திற்கு ஞாயிற்றுக்கிழமை முழு நாள் ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் வற் வரியில் புதிதாக இணைக்கப்படும் 97 பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான பட்டியலை சபைக்கு சமர்ப்பிக்குமாறு அரசிடம் எதிர்க்கட்சிகள்வலியுறுத்தியபோதும் அதனை சமர்ப்பிக்காது வற் வரி சட்டமூல விவாதத்தை தொடர்ந்து முன்னெடுத்து சட்டமூலத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு அரசு முயற்சித்தது.

என்றாலும் எதிர்க்கட்சிகள் '' கூட்ட நடப்பெண்'' கோரிய நிலையில் அதற்கு தேவையான 20 எம்.பிக்கள் சபையில் இல்லாத நிலையில்பிரதிசபாநாயகர்சபையை ஞாயிற்றுக்கிழமைஒத்திவைத்ததால் பெறுதிசேர்வரி(திருத்தச்)சட்டமூலம் (வற்)மீதானவிவாதம்இடைநடுவில் கைவிடப்பட்டது.

இந்நிலையில் இந்த விவாதத்தை நேற்று நடத்தி சட்டமூலத்தை நிறைவேற்றுவது தொடர்பில் சபைமுதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவினால் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டது. ஒதுக்கீடு (2024) சட்டமூலம் மீதான திங்கட்கிழமை தினத்துக்குரிய குழுநிலை அலுவல்கள் நிறைவுற்றதை தொடர்ந்து ஒழுங்குப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட பெறுமதி சேர் வரி (திருத்தச்) சட்டமூலம் மற்றும் நிதிச்சட்டமூலம் மீதான இரண்டாம் மதிப்பீட்டை விவாதித்து திங்கட்கிழமையே நிறைவேற்றுவதற்கான பிரேரணையை சபை முதல்வர் முன்வைத்தார். அத்துடன், குறைநிரப்புத் தொகை செலவீனத் தலைப்பையும் திங்கட்கிழமையே அங்கீகரிப்பதற்கும் அவர் முன்மொழிந்தார்.

அதற்கமைய, இந்தப் பிரேரணை மீது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சி கோரிக்கை விடுத்தது. இதற்கமைய நேற்று காலை 10 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் பெறுமதிசேர் வரி (திருத்தச்) சட்டமூலம் மற்றும் நிதிச்சட்டமூலம் மீதான இரண்டாம் மதிப்பீட்டை விவாதித்து திங்கட்கிழமையே நிறைவேற்றுவதற்கு ஆதரவாக 92 வாக்குகளும், எதிராக 41 வாக்குகளும் அளிக்கப்பட்டன. அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வாக்களிப்பதிலிருந்து விலகியிருந்ததுடன், அதற்கமைய ஆளும்கட்சியால்கொண்டுவரப்பட்ட தீர்மானம் 51 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில் திங்கட்கிழமை (11) 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் கடற்தொழில் அமைச்சு மற்றும் நீர்ப்பாசன அமைச்சுஆகியவற்றுக்கானசெலவுத் தலைப்புக்கள் மீதான விவாதம் இடம்பெற்ற நிலையில் அதனுடன் இணைந்ததாக இந்தப் பிரேரணை மீதான விவாதத்தையும் முன்னெடுக்க சபாநாயகர் முயற்சித்தார். எனினும் இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தவே ''சரி அப்படியானால் வரவு செலவுத்திட்ட திங்கட்கிழமை (11) விவாதம் முடிந்தவுடன் தனியாக விவாதத்திற்கு எடுப்போம். விவாதம் 8 மணியானாலும் விவாதத்தை தொடர்வோம்'' எனக்கூறிய சபாநாயகர் அதற்கு சபையின் அனுமதியும் கோரினார்.

இதற்கு சபையும் அனுமதி வழங்கியது. எனினும் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் கடற்தொழில் அமைச்சு மற்றும் நீர்ப்பாசன அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத்தலைப்புக்கள் மீதான விவாதத்தில் அரசு தரப்பினரின் நேரத்தை மட்டுப்படுத்தி எதிர்க்கட்சியினருக்கான நேரம் வழங்கப்பட்ட நிலையில் இவ்விவாதம் மாலை 4.30 மணிக்கு நிறைவுற்றது.

இதனையடுத்து உடனடியாகவே சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம், நிதிச் சட்டமூலம் ஆகியவை தொடர்பான இரண்டாவது மதிப்பீடு விவாதத்திற்கு எடுக்கப்பட்டு நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க உரையாற்றினார். அவரின் உரை முடிந்தவுடன் அரசு பிரேரணையை நிறைவேற்ற முற்பட்டது. இதற்குஎதிர்க்கட்சிகள்கடும் எதிர்ப்பை வெளியிட்டதுடன் தமது உரைகளுக்கு நேரம் ஒதுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தின. ஆனால் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விவாதத்தில் எதிரிக்கட்சிகள் தமது கருத்துக்களை முன்வைத்ததால் திங்கட்கிழமை (11) விவாதம் தேவையில்லையென சபாநாயகர் கூறியதனால் சபையில் கடும் அமளிதுமளி ஏற்பட்டது.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுந்து, சபைமுதல்வர் சுசில் பிரேமஜயந்த இந்தவிவாதத்தைநடத்தபோதுமான காலத்தைவழங்குவதாககாலையில் சபையில் தெரிவித்தார். அதனாலே நாங்கள் அதற்கு இணங்கினோம். ஆனால் தற்போது விவாதத்துக்கு இடமளிக்காமல் வாக்களிப்புக்கு செல்வது ஜனநாயக விராதே செயலாகும் என்றார்.

இருந்தபோதும் வாக்களிப்புக்கு செல்ல கோரம் மணியை ஒலிக்க விடுமாறுசபாநாயகர்உத்தரவிட்டார். அதன் பிரகாரம் வாக்களிப்பு மாலை 4,45மணியளவில்இலத்திரணியல் முறையில் இடம்பெற்றது.

அதன் பிரகாரம் பெறுமதிசேர் வரி (திருத்தச்) சட்டமூலம், இரண்டாம் மதிப்பீடு வாக்களிப்புக்கு விடப்பட்ட நிலையில் ஆதரவாக 98 வாக்குகளும்எதிராக41வாக்குகளும் அளிக்கப்பட்டநிலையில்57மேலதிக வாக்குகளினால்நிரைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து பெறுமதி சேர் வரி (திருத்தச்) சட்டமூலம், மூன்றாம்மதிப்பீடும்வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது ஆதரவாக 100 வாக்குகளும்எதிராக55வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் 45 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

வாக்களிப்பில் ஆளும் கட்சி உறுப்பினரானமுன்னாள்அமைச்சர் ரொஷான்ரணசிங்கசட்டமூலத்துக்கு எதிராக வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும் இதேவேளை நிதிச் சட்டமூலம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

## ரணிலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற இந்த செய்தியை இந்த சபையில்தெரிவித்துக்கொள்கிறேன். எனவே ஆளும்தரப்பிலிருந்து பணம் பெற்றுக்கொண்டு இவ்வாறான அப்பட்டமானபொய்ப்பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## பெற்றோல்,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரி திருத்தம் ஏற்படுத்துகின்றது.

புதிய வரிஜனவரி முதலாம் திகதி முதல்நடைமுறைக்குவரும். அதன் பின்னர் பெற்றோல் விலை 48 ரூபா வரை அதிகரிக்கும். அதேநேரம் டீசலின் விலையானது 59 ரூபாய் 2 சதத்தால் அதிகரிக்க உள்ளது.

நாட்டில் 49 சதவீதமான மின்சார தேவியை பூர்த்தி செய்வதற்கு எரிபொருளே தேவையாக உள்ளது. டீசல் ஒரு லீற்றர் 59 ரூபா அதிகமாக அதிகரிக்கப்படுகின்ற பொழுது மின்சார கட்டணமும் நிச்சயமாக அதிகரிக்கப்படும்.

அதேநேரம் ஜனவரி மாதம் முதலாம் தேதி முதல் நீர்க்கட்டணங்களும்அதிகரிக்கப்பட உள்ளன. குறிப்பாகநீர்கட்டணங்கள்நூற்றுக்கு முப்பது சதவீதத்தில் அதிகரிக்கப்பட உள்ளன - என்றார்.

## தபால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிப்பு வழங்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்துவதும் இந்த வேலைநிறுத்தத்தின் மற்றுமொரு நோக்கமாகும் என அவர் கூறினார்.

நாடளாவிய ரீதியில் நேற்று மாலை 4 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட தபால் ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு இன்று நள்ளிரவு வரை தொடரவுள்ளது என்றார்.

## நெல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வையே ஆகும். தற்போது அனைத்து துறைகளினதும் ஒத்துழைப்புடன் எமது அமைச்சு முன்னெடுத்த வேலைத்திட்டங்கள் குறிப்பிடத்தக்களவுமுன்னேற்றத்தை கண்டுள்ளது.

மிகவும் சவால்மிக்க சந்தர்ப்பத்திலேயே நான் இந்த அமைச்சை ஏற்றுக்கொண்டேன். வயல்களுக்குச்சென்றுபயிரிடுமாறு நான்முதல்முதலாகவிவசாயிகளுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தினேன். அன்று 212,000 ஹெக்டெயார்கள் நெல் பயிரிடப்பட்டது. ஆனால் இந்த விளைச்சலை அதிகரிக்க ஆர்வத்துடன் செயற்படுமாறு நான் மிகவும் தாழ்மையுடன் விவசாயிகளிடம் வேண்டுகோள் விடுத்தேன்.

உரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பயிரிடுமாறு நான் கூறினேன். அதன் பிறகு 512,000 ஹெக்டெயார்கள் நெல் பயிரிடப்பட்டது. இதுவே அண்மைக்காலத்தில் கிடைத்த அதிக விளைச்சலாகும்.

அன்றும் பல்வேறு சவால்கள் காணப்பட்டன. தரம் குறைவான உரம் கொண்டுவரப்படுவதாகவும், நிறை குறைந்தது என்றும் கூறப்பட்டது. உரங்களில் புழுக்கள் இருப்பதாகவும்கூறினார்கள். ஆனால் ஜனாதிபதி மற்றும் ஆட்சியாளர்கள் மீதுநம்பிக்கைவைத்துவிவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டனர்.

அதன் பின்னர் நாம் படிப்படியாக இரு போகங்களிலும் அதிக விளைச்சலைப் பெற்றுக் கொண்டோம். நாம்அனைத்துவகை உரங்களையும் விவசாயிகளுக்கு உரியநேரத்தில்வழங்கநடவடிக்கை எடுத்தோம். நிதி உதவிகளையும் வழங்கினோம். எரிபொருள் மாணியங்களையும்வழங்கினோம். இதன் மூலம் வெற்றிகரமான நெல் விளைச்சல் கிடைத்தது.

எமக்கு வருடாந்தம் 25,40,000 மெற்றிக்தொன்அரிசிஅவசியமாகும். இம்முறை 27,50,000 மெற்றிக் தொன் விளைச்சல் கிடைத்தது. இதன் ஊடாக இரண்டு இலட்சம் மெற்றிக் தொன்னுக்கு மேல் மேலதிகவிளைச்சல்கிடைத்துள்ளது. ஆனாலும் அரிசி இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உள்ளது. காரணம், அதிக நெல் விளைச்சல் கிடைத்தாலும்நெல்ஆலையாளர்கள் அவற்றை முழுமையாக சந்தைக்கு விநியோகிக்காத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

அதேபோன்று கீரி சம்பா விளைச்சலில் குறைவு ஏற்பட்டதே தவிர பொதுவாக மக்கள் உட்கொள்ளும் அரிசி வகையில் குறைவு ஏற்படவில்லை. எனவே இந்த பண்டிகைக் காலத்தில் அரிசி இறக்குமதிசெய்யவில்லைஎன்றால் அரிசியின் விலை வேகமாக அதிகரித்திருக்கும். இதனால்தான் நாம் விருப்பமின்றியேனும் அரிசி இறக்குமதி செய்யவேண்டி ஏற்பட்டுள்ளது.

2024ஆம்ஆண்டு4வகையான பயிர்களை முதன்மைப்படுத்த திட்டமிட்டுள்ளோம். நெல் தற்போது வெற்றிகரமான நிலையை அடைந்துள்ளது. அதனுடன் சோளம், மிளகாய், உருளைக் கிழங்குஆகியவற்றைபயரிடுவதற்கு மக்களைத் தூண்டுவதற்கு எதிர்பார்த்துள்ளோம். அதற்காக நாம் ஏற்கனவே ஒரு வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

இவைபெரும்பாலும்இறக்குமதி செய்யப்படுகின்றன. அவற்றை எமது நாட்டில் பயிரிடுவது குறித்து கவனம்செலுத்தியுள்ளோம். இந்தப் பயிர்கள் இலகுவாக விளையக் கூடிய பகுதிகளில் வேறு பயிர்களை பயிரிட வேண்டாம் என்று நாம் கூறியுள்ளோம். அப்பிரதேசங்களை குறித்த பயிர்களுக்கு ஒதுக்குமாறு அறிவுரை வழங்கியுள்ளோம்.

கடந்த காலங்களில் முட்டை இறக்குமதிசெய்யவேண்டியநிலை ஏற்பட்டது. அது தொடர்பில் நாம் விசேட வேலைத்திட்டமொன்றை தயாரித்துள்ளோம். அடுத்த வருடம் முதல் முட்டை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது. அதேபோன்று கோழி இறைச்சி இறக்குமதி செய்ய அனுமதி கோரப்பட்டாலும் கூட நாம் அதற்கு அனுமதி வழங்கவில்லை.

தற்போது கோழி இறைச்சியின் விலை குறைவடைந்துள்ளது. பறவைக்காய்ச்சல் அற்ற நாடு என்ற வகையில் எமக்கு கோழி இறைச்சி ஏற்றுமதி செய்யக் கூடிய அதிக சந்தர்ப்பம் உள்ளது. ஏற்கனவே நாம் மாலைத்தீவுக்கு ஏற்றுமதி செய்கின்றோம். அடுத்த வருடம் முதல் இதனை இன்னும் பல்வேறு நாடுகளுக்கு விரிவுபடுத்த திட்டமிட்டு வருகின்றோம்.

தற்போது விளைச்சல் சேதங்களுக்கு நட்ட ஈடு வழங்கி வருகின்றோம். அதில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை நிவர்த்தி செய்து அந்த வேலைத்திட்டத்தை துரிதப்படுத்தி வருகின்றோம். வரலாற்றில் முதல் முறையாகவே இவ்வாறு விளைச்சல் சேதங்கள் ஏற்பட்டு ஓரிரண்டு மாதங்களில் நட்ட ஈடு வழங்கப்படுகின்றது. இதற்காக ஜனாதிபதிக்கும் நிதி அமைச்சுக்கும் பாராட்டுகளை தெரிவிக்கின்றேன்.

பெருந்தோட்டக்கைத்தொழிலை எடுத்துக்கொண்டால், இறப்பரில் நமது நாடுதற்போது பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது. அதனை மீண்டும் மேம்படுத்த அவசியமான திட்டங்களைவகுத்துவருகின்றோம். தேயிலையின்தரத்தைஉயர்த்தவும் விளைச்சலை அதிகரிக்கவும் அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கறுவா பயிர்ச்செய்கையின் அபிவிருத்திக்காக தனியானதொரு திணைக்களத்தைநிறுவியுள்ளோம். அது தொடர்பில் கூடுதல் அவதானம் செலுத்தியுள்ளோம். கோப்பி பயிர்ச்செய்கை குறித்து விசேட கவனம்செலுத்தியுள்ளோம். அதனை மேம்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம்.

இளைஞர்கள் விவசாயத்தை விட்டுத் தூரமாகியுள்ளமை எமக்குள்ள பெரும் பிரச்சினையாகும். பெரும்பாலும் வயதானவர்களே விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். வருமானம் போதாமை உட்பட இன்னும் பல்வேறு காரணங்களினால் இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபடுவதில்லை. எனவே அவர்களை விவசாயத்தின் பக்கம் ஈர்க்க அவசியமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

இதற்காக விவசாய நவீனமயப்படுத்தல் பணிகளை மேலும்வலுப்படுத்தவும்நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# மின்சார சபை, அமைச்சு மட்டத்திலும் விரிவான விசாரணை மின் துண்டிப்பு குறித்து ஆரம்பம்

## இந்திக்க அநுருத்த கூறுகிறார்



நாடு முழுவதும் வெள்ளிக்கிழமை ஏற்பட்ட மின் துண்டிப்பு தொடர்பாக மின்சார சபை மற்றும் எரிசக்தி, மின்சக்தி அமைச்சு மட்டத்தில் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சம்பந்தப்பட்ட தரப்பினர் தொடர்பில் சுயாதீனமாகவும் நேர்மையாகவும் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்பதை பொறுப்புடன் தெரிவிக்கிறோம் என இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த தெரிவித்தார்.

நாடு முழுவதும் மின் துண்டிப்பு ஏற்பட்டமை தொடர்பில் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் -

மின் துண்டிப்பு தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அமைச்சு மட்டத்திலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதேபோன்று ஒரு மின் விநியோக கட்டமைப்பு மாத்திரம் செயலிழந்திருந்தால் எவ்வாறு முழு நாட்டுக்கும் மின்சாரம் இல்லாமல் போயிருக்கும் என எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பியுள்ளார். இது தொழில்நுட்ப ரீதியாக ஆராயவேண்டிய விடயம் என்பதை நான் அவருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுவரை நாம் மின் உற்பத்தியை நுரைச்சோலை அனல் மின் நிலையம் மூலம் முன்னெடுக்கின்றோம். அதன் மூலம் 300 மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

ஏனைய அனைத்து மின்சாரத்தையும் நாம் நீர் மின் உற்பத்தி மூலமே பெற்று வருகின்றோம். அந்த வகையில் சீரற்ற காலநிலை காரணமாக நீர் மின் உற்பத்தி விநியோக கட்டமைப்பிலேயே இந்த செயலிழப்பு இடம்பெற்றுள்ளது.

அந்த சந்தர்ப்பத்தில் 1500 மெகாவோட் மின்சாரத்திற்கான கேள்வி இருந்தது. எனினும் 300 மெகாவோட் மின்சாரமே இருந்தது. அச்சமயம் நுரைச்சோலை மின் விநியோக கட்டமைப்பும் செயலிழந்தது. அந்த வகையில் அனைத்து விநியோக கட்டமைப்புகளும் செயலிழந்தன.

இவற்றை வழமை நிலைக்கு கொண்டு வருவதற்கு சுமார் 4 மணித்தியாலங்கள் தேவைப்பட்டன. சிறு மின் உற்பத்தி நிலையங்கள் மூலமே நிலைமையை சரி செய்ய முடிந்தது. மின்சார சபையும் எரிசக்தி, மின்சக்தி அமைச்சும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

அதேவேளை நாம் ஒன்றை குறிப்பிட வேண்டும். 2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படவிருந்த பொல்பிட்டிய, கொத் மலை ஆகியவற்றின் நடவடிக்கைகள் வருடக்கணக்கில் தாமதமாகியது.

அதனால் ஏன் இந்தளவு காலதாமதம் ஏற்பட்டது என அது தொடர்பிலும் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் காஞ்சன விஜேசேகர சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். இதற்கு பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன. இரண்டு தினங்களுக்கு முன் 5 லட்சம் பேருக்கு மின்சாரம் இல்லாமலுள்ளதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்தன.

எனினும், இந்த வருடத்தில் அனைத்து நாள்களும் எந்தத் தடையுமின்றி நாம் மின்சாரம் வழங்கினோம். எதிர்பாராத விதமாகவே இந்த செயலிழப்பு ஏற்பட்டது என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

அந்த வகையில் மிகவும் சுயாதீனமாகவும் நேர்மையாகவும் அதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்பதை நாம் பொறுப்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம். -என்றார். (05)

# ‘எங்களுடன் இணையுங்கள்’ வடக்கு மக்களுக்கு அழைப்பு

## ஜே.வி.பி. தலைவர் அநுர கூறுகிறார்

எங்களுடன் இணையுங்கள் நாங்கள் உங்கள் தேவைகளைபூர்த்தி செய்வோம் என வடபகுதி மக்களிற்கு வேண்டுகோள் விடுத்துள்ள ஜேவிபியின் தலைவர் அனுரகுமார திசநாயக்க ஊழல்மிகுந்த ஆளும் குழுவை தோற்கடிப்பதற்கான தேசிய விடுதலை இயக்கத்திலும் நீங்கள் இணைந்துகொள்ளவேண்டும்எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்

இந்து நாளிதழிற்கான பேட்டியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எங்களின் நெருங்கிய அயல் நாடான இந்தியா மிகவும் வலுவான அரசியல் பொருளாதார மையமாக மாறியுள்ளமை எங்களிற்கு தெரியும்.

ஆகவே பொருளாதார அரசியல் முடிவுகளை எடுக்கும்போது அது இந்தியாவைஎப்படிபாதிக்கும்என்பதுகுறித்து நாங்கள்கவனம் செலுத்துவோம்.

இரண்டுசக்திவாய்ந்தநாடுகள்மத்தியிலேயே பூகோளஅரசியலில் போட்டி காணப்படுகின்றது இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் இல்லை

இந்த நாட்டில் சில பிரச்சினைகள் உள்ளன என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம் குறிப்பாக தமிழர்கள் முஸ்லீம்கள் தொடர்பில் - அவர்களது மொழிகலாசார விடயங்கள் மற்றும் ஆட்சி முறையில் பங்கெடுத்தல் தொடர்பில் பிரச்சினைகள் உள்ளன.

இந்த விவகாரங்களிற்கு நாங்கள் தீர்வைக் காணவேண்டும்.

வடக்கு மக்களிற்கு தேசிய மக்கள் சக்தி விடுக்கின்ற வேண்டுகோள் இதுதான் எங்களுடன் இணையுங்கள் நாங்கள் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வோம்.

ஊழல்மிகுந்த ஆளும்குழுவை தோற்கடிப்பதற்கான தேசிய விடுதலை இயக்கத்திலும் நீங்கள் இணைந்துகொள்ளவேண்டும். (05)

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் கிளிநொச்சியிலும் சர்வதேச மனித உரிமைகள் தினத்திலன்று போராட்டம்



சர்வதேச மனித உரிமைகள் தினமான ஞாயிற்றுக்கிழமைவலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

வடக்கு, கிழக்கு தழுவிய இந்தப் போராட்டத்திற்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அழைப்பு விடுத்திருந்தனர்.

அதன் பிரகாரம், கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் முன்னெடுத்த இப்போராட்டம் நேற்று காலை கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளது சங்க அலுவலகத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

கடந்த 15 வருடங்களாகத் தமக்கு இழைக்கப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகப் போராடிவரும் நிலையில், இது-வரையில் எந்த தீர்வும் எட்டப்படவில்லை எனத் தெரிவித்து சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் கண்டன ஆர்ப்பாட்டமாக முன்னெடுத்தனர். இந்தப் போராட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இதன்போது, இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைமீறல்கள், தமக்கு இழைப்பட்ட அநீதிகளுக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்பதை வலியுறுத்தி போராட்டக்காரர்கள் பதாதைகளை ஏந்தியிருந்ததுடன், ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு மகஜரும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (05)

# அராலி தொடக்கம் பொன்னாலை வரையிலான கடற்கரையோர சுவீகரிப்பை எதிர்த்து போராட்டம்









அராலி தொடக்கம் பொன்னாலைவரையானகடற்கரையோர பிரதேசத்தையும் பொன்னாலை, துருத்திப்பிட்டியையும் சுவீகரிப்பதற்கு வன ஜீவராசிகள் திணைக்களம் எடுத்துள்ள முயற்சியை கைவிடுமாறு வலியுறுத்தி போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

பொன்னாலை சந்தியில் ஞாயிற்றுக்கிழமை காலை இந்த கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது ’எமது கடல் எமக்கு வேண்டும்’, ’எமது நிலம் எமக்கு வேண்டும்’, ’கடலைச் சுவீகரித்துகடற்தொழிலாளர்களை பட்டினிச்சாவிற்குள் தள்ளாதே’, ’எமதுகடலைசுவீகரிக்கஎவருக்கும் அனுமதியில்லை’, ’ரணில் அரசே எமது கடலை சுவீகரித்து வரலாற்று தவறைச் செய்-யாதே’, ’மேய்ச்சல் தரையையும் மயானங்களையும் மாட்டு வண்டி சவாரித் திடல்களையும் சுவீகரிக்கும் திட்டத்தை உடனே கைவிட வேண்டும்’ உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தில் பொன்னாலை தொடக்கம் அராலி வரையுள்ள கடற்றொழிலாளர்கள், அரசியல் கட்சிகளின் சார்பில் சட்டத்தரணி க.சுகாஸ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மற்றொரு பாறாங்கல்

பெறுமதி சேர் வரி அதிகரிப்பு சட்டத் திருத்தம் நாடாளுமன்றத்தில்நேற்றுநிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் தை மாதம் முதல் இந்த வரி 18 சதவீதமாக அதிகரிக்கப்படுகின்றது. அதுமட்டுமல்ல 95 புதிய பொருட்களுக்கும் இந்த வரி விதிக்கப்படுகின்றது. இதனால் பொருகளின் விலைகள் மீண்டும் எகிறப் போகின்றது.

ஏற்கனவே பொருளாதார நெருக்கடியால் துவண்டுகிடக்கும் மக்கள் மீது மற்றொரு பாறாங்கல்லைத் தூக்கி வைத்திருக்கிறது இந்த வரி அதிகரிப்பு.

பெற்றோலியப் பொருள்களுக்கும் இனிவரும் காலங்களில் இந்த வரி அறவிடப்படவுள்ளது. அதனால் அவற்றின் விலைகள் ரூபாய் 50க்கும் மேல் அதிகரிக்கும் என்று கூறப்படுகின்றது. அப்படிப் பெற்றோலியப் பொருள்களின் விலைகள் அதிகரித்தால் அதன் தாக்கத்தால் உணவுப் பொருட்கள், போக்குவரத்துக் கட்டணங்கள் என எல்லாமே அதிகரிக்கும். இது மக்களை மேலும் மேலும்துன்பச்சுமைக்குள்ஆழ்த்தப்போகின்றது.

வரிகளைஅதிகரித்து, அதன்பெருஞ்சுமையை மக்கள் மீது சுமத்தி அரச வருவாயைப் பெருக்குவதைத் தவிர வேறு வழிகள் எதுவும் அரசிடம் இல்லை என்பது தெளிவாகின்றது. உற்பத்திப் பெருக்கம், ஏற்றுமதிப் பொருளாதாரம், பசுமைப்பொருளாதாரம், நீலப்பொருளாதாரம்என்று பலவற்றைப் பற்றியும் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தொடர்ச்சியாகப் பேசி வந்தாலும் அவற்றினால் எல்லாம் அரசுக்கு உடனடியாக வருமானம் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. அப்படிப்பட்ட வருமானம் கிடைப்பதற்கு இன்னும் பல வருடங்கள் ஆகலாம்.

அதுவரையில்அரசுக்குவருமானம்ஈட்டவரியை அதிகரிப்பதைத் தவிர அரசிடம் வேறு திட்டங்கள் இல்லை. அதனால் விளைவுகளை மக்களே தாங்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். மக்களையும் நாட்டையும் இந்த நிலைக்குத் தள்ளியவர்கள் தொடர்ந்தும் சுகபோக வாழ்க்கையில் திளைத்திருக்க, அவர்களின் தவறுக்கானதண்டனையைமக்களேஅனுபவிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

ஏற்கனவே பொருளாதாரப் பாதிப்பால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள தரப்பினருக்கு அரசின் உதவித் திட்டமும் முழுமையாகச் செயற்படுத்தப்படாதநிலையில்வரிஅதிகரிப்பினால் அவர்களின் நிலமை கவலைக்கிடமாகப் போகின்றது. மந்தபோசாக்கு, நாளொன்றுக்கான உணவுத் தேவையை முழுமையாகப் பூர்த்திசெய்ய முடியாதநிலைமைஎன்பவற்றால்பாதிக்கப்பட்டுள்ள இந்த மக்களின் நிலைக்கு இந்த வரி அதிகரிப்பு மேலும் பலரையும் தள்ளிவிடப்போகின்றது.

பன்னாட்டுநாணயநிதியத்தின்நிபந்தனைகளை நிறைவேற்ற வரி அதிகரிப்பைத் தவிர வேறு வழியில்லை என்று ஆளும் தரப்பினர் கையைக் காட்டித் தப்பிக்கொள்வது ஏற்றுக்கொள்ளப்படமுடியாதது. இந்த நிலமை எப்போதுமாறும்என்பதற்கானஎதிர்வுகூறல்களும் கிடையாது என்கிற நிலையில் மக்கள் மேலும் மேலும் துன்பங்களைச் சுமப்பதற்குத் தயாராக இருக்கவேண்டும் என்பதே யதார்த்தம்.

# கற்பகதரு என்னும் அற்புதம்

# பனையின் பழம்

அங்கம் –26



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

பலவிதமான பழங்கள் இருக்கின்றன. அவைகள் ஒவ் வொன்றுமே தனித்தனி யான தன்மையும் , சுவை யும் கொண்டனவாகவே இருக்கின்றன. அநேகமான பழங்களை அது இருக்கின்ற மரத்திலோ அல்லது கொடி யிலோ அல்லது செடியிலோ நாமே சென்று பறித்துத்தான் சுவைக்கும் நிலை காணப் படுகிறது. ஆனால் பனம்பழம் அப்படியான பழமல்ல. தானாககவே கனிந்து மண் ணிலே விழுந்து தேனாக இனி ப்பினை எமக்கெல்லாம் அளித்து நிற்கிறது என்பதுதான் முக்கியமாகும். மண்ணில் விழுந்தவுடன் அதன் வாசம் காற்றில் பரவி சூழவுள் ளார்கள் மனமெல்லாம் பதிந்து நாவூறச் செய்து நிற்கும். நன்றாகக் கனிந்த பனம்பழம் உயரான பனையிலிருந்து மண்ணில் விழும் பொழுது , தரை சற்று கடினமாய் இருந்தால் விழுந்த பழம் பிளந்த வண்ணம் காட்சி தரும். கறுப்புத் தோல் வெளியிருக்க மஞ்சள் நிறத்துடன் உட்பகுதி வெளிப்பட பனம்பழம்







விரிந்து கிடப்பதைப் பார்த்தபடியே இருக்கலாம், அந்த அழகு அகத் திலே பதிந்தே விடும். அது ஒரு தனி அழகு என்றுதான் சொல்ல வேண்டும். தென்னை எப்படி முயன்றாலும் பனைக்குப் பக் கத்தில் வந்துவிடவே முடியாது. தேங்காய், பழத் தேங்காய் என்று பெயர் பெற்றாலும் ; பனைபோல பழத்தைக் கொடுக்க முடி யாமல் இருக்கிறது அல்லவா! பனை என்றுமே தனித்துவமானதுதான் என்று தென்னையானது தெரிந்து கொண்டால நல்லது அல்லவா !

பனம்பழத்தை ஊட்டச்சத்து நிறைந்த உணவாகக் கருதி அந்தக் காலங்களில் தினமுமே பலரும் உண்டு மகிழ்ந்தார்கள். இன்று அந்தப்பழக்கம் அருகி வரு வதைத்தான் காணமுடி கிறது. இதுதான் காலத்தின் கோலம் என்று கருதிடக் கூடியதாக இருக்கிறது. பப்பாளிப் பழத்தை அனைவரும் விரும்பி உண்ணு கிறார்கள். அந்தப் பப்பாளிப்பழத்தைவிட கூடு தலான வைட்டமின் சி , மற் றும் கல்சியம் அதிகளவில் பனம்பழத்தில் காணப்படுகிறது என்பது நோக்கத்தக்க தாகும்.

பனம்பழத்தின் சாறில் நீர்ச்சத்து, புரதச் சத்து , கொழுப்பு சத்து, உலோக உப்புக்கள் சர்க்கரை, கரோட்டின் ஆகியன நிறைந்து காணப்படுகின்றன என்பது கருத்திருத்த வேண்டிய தேயாகும். அதுமட்டுமல்லாமல் கண்ணினது பார்வைத் திறனை அதிக ரிக்கச் செய்யும், பீட்டா கரோட்டின் என்னும் வைட் டமின் ஏ சத்து பனம்பழத்தில் நிறைந்தே இருக்கிறது என்பது நோக்கத்தக்கதேயாகும்.

பனம்பழத்தைச் சாப்பிட்டு வந்தால் உடலில் நோயெதிர்ப்புச் சக்தி ஏற்படுகிறதாம் என்றும் அறிய முடிகிறது. இதனால் சருமத் தில் வருகின்ற நோய்களுக்கு நல்ல மருந்தாகவும் பனம்பழம் அமைகிறது. வெப் பம் என்பது மிகவும் முக்கிய மானதாகும். அந்த வெப்பத்தை உடலுக்கு வழங்கிடப் பனம்பழம் உதவி யாய் நிற்கிறது. மலச்சிக்கல் என் பது பல நோய்களுக்குக் காரண மாகி விடுவதை யாவரும் அறி வோம். அந்த மலச்சிக்கலி னையே பனம்பழம் இல்லாமல் செய்து துணையாகி நிற்கிறது. அதுமட்டுமல்ல உடலிலே உள்ள கழிவுகளை அகற்று வதற்கும் பனம்பழம்கைகொடுத்துநிற்கிறது.

இன்று பலபேருக்கும் பிரச் சினையாக இருக்கும் வியாதி சர்க்கரை வியாதி ஆகும். சர்க்கரை வியாதியினைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திடும் ஆற்றல் பனம் பழத் துக்கு இருக்கிறது என்பது மிகவும் முக்கி யமாகும். சருமத்திலே ஏற் படும் நோய்களுக்கு பனம்பழத் தின் சாறு நல்ல மருந்தாகிறது. சருமத்தில் நோ ய்கள் வந்தால் பனன்பழச்சாற்றினைச் பூசுவது நல்ல சுகத்தை அளிக்கிறது என்று அறிந்திடக் கூடிய தாக இருக்கிறது. பனம்பழமானது மிகவும் கைகொடு க்கும் பழ மாக இருக்கிறது என்பதைக் கருத்திருத் தல் வேண்டும். பனம்பழத் தினை அழவோடு உண்டு ஆரோக்கியத்தைப் பெற்றுக்கொள்ளுவது என்பது தான் மிகவும் முக்கியமாகும்.

பனம்பழத்தை விருப்பத்து டன் சுவைத்து மகிழும் நிலை தொடருவதில்லை. காரணம் ; பருவம் முடிந்த பின்னர் அடுத்த வருடந்தான் பனம்பழத்தைப் பார்க்கவும் சுவைத்திடவும் முடியும் என்னும் நிலை இருப்ப தாலே. பனப்பழப் பிரியர்களின் மனப்பாங்கினை கருத்திருத்தி லிருத்து பனம்பழச் சுவையினை வேண் டிய பொழுதெல்லாம் சுவைத்து மகிழ்வதற்கான வழி வகைகளும் நிறைந்தே வந்தி ருக்கின்றன என்பதுதான் மிகவும் முக்கியமான கருத்தெனலாம்.

பனம் பழத்தினை விரும்பிய பொழுதெல்லாம் சுவைப்பதற்கு என்னதான் வந்திருக்கிறது என்று அறிவதில் ஆர்வம் ஏற் படுகிறதல்லவா! பனம்பழத் தின் முக்கிய பாகம்தான் அதில் நிறைந்து காணப்படும் களி யாகும். களியில்லாவிட்டால் பனம்பழம் வெறும் விதையா கவும் அதைச்சுற்றியிருக்கும்

(5ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir

# கற்பகதரு என்னும் அற்புதம்.............

(4ஆம் பக்கத் தொடர்சசி..)

தும்பாகவுமேகாட்சிதரும். அதில்நிறைந்த களியால்த்தான் பனம்பழம் விரும்பும் பழமாக விளங்குகிறது அல்லவா !



பனம்பழத்தின் களியினை நீண்ட நாட்களுக்கு வைத்திருப்பது எப்படி என்று எங்களின் முன்னோர்கள் திறம்பட அறிந்திருந்தார்கள்.ஏதாவது ஒரு பொருளை நீண்ட நாட்களுக்குக் கெடாமல் வைத்திருக்க வேண்டுமென்றால் – அத ற்காக இரசாயனப் பொருட்களையே கட்டாயம் பயன்படுத்த வேண்டும் என்பது தான் பொதுவான புரிதலாகும்.ஆனால் எந்தவிதமான இரசாயனப் பொருட்களையும் பயன்படுத்தாமல் எங்கள் முன்னோர்கள் பனங்களியை நீண்டநாள் பயன்படுத்தினார்கள் என்றால் ஆச்சரியமாக இருக்கி றதல்லவா ! அவர்களின் உணவு பதனிடும் தொழில் நுட்பத்தின் விளைவாக பனங்களியினைப் பாது காத்து பயன்படுத்த எடுத்த முயற்சியின் பயனாக வெளிவந்ததுதான் பனாட்டு .

பனாட்டு என்றதும் நாவூறுகிறதா ? பனாட்டு என்று சொன்னாலே இலங்கையும் குறிப்பாக யாழ்ப்பாண முந்தான் மனதில் வந்து நிற்கும். பனாட்டின் பல நிலை களை யாழ்ப்பாணம் பலருக்கும் உணர்த்தி நின்றது. யாவரையும் திரும்பிப் பார் க்கவும் வைத்தது என்றால் அது மிகையாது. பனாட்டு என்றதும் யாழ்ப்பாணம் மனதில் வந்து நிற்பது போல –அந்த மண்ணில் பிறந்த மகத்தான ஒருவரும் கட்டாயம் வந்தே நிற்பார். அவர் வேறு யாருமல்ல ! எங்கள் தங்கத் தாத்தா

நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்களே ! பனாட்டை எங்கள் தங்கத்தாத்தா எப்படிக்காட்டுகிறார் பாருங்கள் ! செங்கதிரேன் சுடும் பலகாரம் என்று சொல்லும் தங்கத் தாத்தாவின் பனாட்டுப்பற்றிய பார்வை புதுப் பார்வையாக இருக்கிறதல்லவா ! அத்துடன் அவர் விடவில்லை ..... பனாட்டினைக் கண் முன்னே காட்டிவிடவே துடிக்கிறார்....

சுத்தத் தலத்திற் றொடைக்குமே லாகவே
தோன்றிடப் பந்தர் சமைத்துக்கொண்டே
வைத்த பழங்களைப் பட்டடை யிற்கட்டி
வாங்கிப் பிசைகுவர் ஞானப்பெண்ணே
கூறுஞ் சிறுதடி கூட்டியொன் றாய்க்கட்டிக்

குந்தைத் துழாவித் துழாவியெடுத்
தூறுங் களியினைச் சல்லாப் புடைவையி
லூற்றி வடிப்பார்கள் ஞானப்பெண்ணே
எட்டுநா ளெட்டுக் களியினைப் பாயில்விட்
டேவெயிற் காயப் பரவியிறை
மட்டதா கத்தடித் துப்பத மாகவே
வந்தா லெடுப்பார்கள் ஞானப்பெண்ணே

அல்லற் பசிக்கும் அரும் பிணிக்கும் ஆரமுதாம் செல்வப் பனாட்டு எவ்வளவு அருமையான கருத்து.பனாட்டு என்னும் கண்டுபிடிப்பு பயனான கண்டுபிடிப்பாக விளங்குகிறதல்லவா ! பனாட்டுப்பற்றிய இன்னுமொரு பார்வையினைப்பார்ப்போமா ..

கடகமதிற் பினைந்துகளி காயப்பாய் மேற்
கவிழ்த்தூற்றிப் பரவியது காய்ந்தபின்னே
திடவிரும்புத் தட்டகப்பை திட்டிக் கீறிச்
செய்யசிறு தட்டுகளாய்ச் செதுக்கியோலைத்
தடவுயரக் கூடையது தன்னிற் போட்டுத்
தாங்குபரண் மேலடுப்பின் சாரல்வைத்த
புடமதுரப் பனாட்டதனை புசிப்பையாயின்
புத்துடம்பு பூக்குமிது பொய்யாக்கூற்றே

இந்தப் பார்வையினைப் பார்த்தது பனை இராசன் நாடகமாகும்.பனாட்டு என்றாலே யாவரும் விரும் புவார்கள். அந்தப் பனாட்டில் – பாணிப் பனாட்டு, தோற் பனாட்டு , என்னும் வகையும் இருக்கிறதாம். அந்தப் பனாட்டுகள் பற்றி சாதாரணமாகச் சொல்லுவதைவிட எங்கள் தங்கத்தாத்தா சோமசுந்தரப் புலவரின் அழகிய தமிழில் கேட்டால் இனிக்கும் அல்லவா ! அவர் என்ன சொல்லுகிறார் என்று பார்ப்போம் வாருங்கள்.....



மாணிழையாய் செல்வர் மனமாக வுண்ணுகின்ற
பாணிப் பனாட்டின் பர்சுரைப்பேன் – பேணுபனங்
கட்டுயு நெய்யுங் கலந்துகளி பாதியிறை
மட்டுந் தடித்திறுக வார்த்ததற்பின் – கெட்டியாய்
முன்போ லெடுத்து மடித்துமுடை கூடையிலிட்
டன்பாக வுண்ப ரதுநிற்கப் –பின்புமொரு
பாக முரைத்திடுவேன் பக்குவமாய்க் கேள்சிறுதுண்

டாகப் பனாட்டை யரிந்துகொண்டு – வேகவறுத்
திட்டிடித்த வெள்ளு மிளகரிசி சீரகமும்
அட்டெடுத்த பாணி யுடனளவி – முட்டியிலே
பெய்துவைத்துப் பின்பு பெருவிருந்தா யுண்பார்கள்

என்று பனாட்டின் ஒருவகையான -பாணிப் பனாட்டிப் பாடி எங்களையும் மகிழ்விக்கின்றார் தங்கத்தாத்தா. பாணிபனாட்டைக் காட்டிய தங்கத்தா த்தா , தோற்பனாட்டையும்காட்டுகிறார்பாருங்கள்.....

செய்யதோற் பனாட்டின் திறமுரைப்பே– னெய்தும்
அமளிபோய் மாறி யருந்தலாய் வீழுங்
கமழுங் கநியின் களியை – யமைவுபெற
மூன்றிரண்டு நாள்வார்த்து முற்றாகக் காய்ந்ததற்பின்
ஏன்றதாள் போல வுரித்தெடுத்துத் – தோன்றுஞ்
சுருளாக்கிப் பச்சடியுந் தொட்டுண்பர் மேலும்

பனாட்டையும் பெருமைப்படுத்தி அதன் வகைகளையும் சுவைப்படுத்தி தன்னுடைய சுந்தரத்தமிழில் தந்திருக்கும் எங்கள் தங்கத்தாத்தாவை மனமிருத்தினால் , கூடவே பனாட்டும் இனித்தபடியே இருக்கும் அல்லவா !

யாழ்ப்பாணத்தவர் பலர் தென்னிலங்கையிலே வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். பெரும்பாலும் சுருட்டுக்கடை வைத்துப் பெரும் செல்வாக்கினை அந்த நாளில் பெற்றிருந்தார்கள். யாழ்ப்பாணத்துப் புகையிலை, சுருட்டு என்றால் தென்னிலங்கையிலும், மலைநாட்டிலும் பெரும் செல்வாக்கை நிலை நாட்டிருந்தது எனலாம். சுருக்கடை முதலாளிகளாய் யாழ்ப்பாணத்தவர்கள் பார்க்கப்பட்டனர் என்பதும் நோக்கத்தக்கது. அந்தச் சுருட்டுக்கடை முதலாளி மார் , யாழ்ப்பாணத்தும் பனாட்டினைதென்னிலங்கையக்குக்கொண்டு சென் று தங்கள் கடைகளில் வைத்து விற்றனர். ஏனைய தமிழ்க் கடைகளிலும் பனாட்டுவிற்கப்பட்டது. தென்னிலங்கைவாழ் சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்துப் பனாட்டை மிகவும் பிரியமாக வாங்கிச் சுவைத்து மகிழ்ந்தார்கள். தென்னிலங் கை மக்களைத் தன்வசப்படுத்தும் ஆற்றல் எங்களின் யாழ்ப்பாணத்துப் பனாட்டுக்கு இருந்தது என்பது கருத்திருத்த வேண்டிய கருத்தேயாகும். தென்னில ங்கையில் மட்டுமல்லாது கிழக்கிலங்கை மக்களும் யாழ்ப்பாணத்துப் பனா ட்டை மிகவும்விரும்பிவாங்கினார்கள். பனாட்டை அவர்கள் பழைய சோற்று டன் கலந்து அதில் தேங்காய்ப்பாலையும் சேர்த்து காலைச் சாப்பாடாக உண் டு பசியாறியிருக்கிறார்கள் என்பதையும்அறியக்கூடியதாகவே இருக்கிறது. பிஸ்கட் , சொக்கிலேற் வகைகளை விரும்பியது போலவே – பனாட்டையும் சிறுவர்கள் யாவரும் விரும்பி கடைகளில் வாங்கிச் சுவைத்தார்கள். யாழ்ப்பா ணத்தில் அதிகமாகப் பனாட்டு எல்லா இடங்களிலும் இருக்கும். கிழக்கிலங் கையில் கடைகளில் மட்டுமே காணப்படும். அங்கு பனாட்டைப் பார்க்கும் சிறு வர்கள் ஆவலுடன் வாங்கிச் சுவைப்பதைநான்என்னுடையஅனுபவத்தில் கண்டிருக்கிறேன்.

கொழும்பிலே நிரந்தரமாகவே வசிக்கத் தொடங்கிய தங்கள் உறவுகளைக் காண்பதற்குக் கொழும்புக்கும் செல்லும் யாழ்ப்பாண உறவுகள் இராசவள்ளிக் கிழங்கு, நல்லெண்ணிய், மாம்பழம், எள்ளுப்பாகு, இவற்றுடன் கட்டாயம் பனாட்டையும் எடுத்துச் செல்ல மறக்கவே மாட்டார்கள். சிங்கள நண்பர்கள் இருந்தால் அவர்களுக்காகவும் பனாட்டைஎடுத்துச்செல்லுவார்கள். பனாட்டைக்கண்டதும் அதனை எடுத்து ஒரு கடி கடித்து விட்டுத்தான் ... பேசவே தொடங் குவார்கள். பனாட்டைக் கொடுத்தே பல காரியங்களைச் சாதிப்பதும் இருந்திரு க்கிறது. அந்தளவு ஆற்றல் மிக்கதுதான் எங்களின் கற்பகதருவின் பனாட்டா கும்.

பனாட்டின் வகைபற்றி தங்கத்தாத்தா பாட்டாய் வெளிப்படுத்தினார். பனாட் டைப் பலநாட்களுக்கு வைத்துப் பயன்படுத்துவதற்காகக் கண்ட தொழில் நுட் பம்தான் பாணிப் பனாட்டாக அமைந்தது. பதனீர் பாணியுடன் ; தேனும் , மிள கும் , சீரகமும் சேர்த்து பாணி காய்ச்சப்பட்டு அதில் பனாட்டினைச் சிறு சிறு துண்டுகளாகப் போட்டு வைப்பார்கள். இப்படி வைக்கப்படும் பனாட்டு ஏறக்கு றைய ஐந்து ஆண்டுகள் வரை பழுதுபடாமல் சுவைத்திடக் கூடியதாகவே இரு க்கும். இதனைவிட இன்னுமொரு முறையும் கையாளப்பட்டது. சீனிப் பாணியில் இட்டு மூடிவைத்துப் பயன்படுத்துவதாகும்.

பனாட்டினைப் பாதுகாப்பாக வைக்கும் முறையில் பாணிப்பனாட்டு அமைகிறது என்பதைப்பார்த்தோம். காய்ந்த பனாட்டினை பனை ஓலை களினால் செய்-யப்பட்ட கூடைகளில் வைத்துப் பொதியாக ஆக்கிக் கொள் ளுவார்கள். பொதிகளாகச் செய்யப்பட்ட பனாட்டில் காணப்படும் ஈரப்பதன் கூடுதல் ஆகாமல் இருப்பதற்காக என்ன முறையினைக் கையாண்டார்கள் தெரியுமா ? அடுப் பங்கரையிலே அதனைத் தொங்கவிட்டார் கள்.அடுப்பங்க ரையின் மேல் வெப்பம் இருப்பதால் இவ்வாறு செய்த உணவுபதனிடம் தொழில் நுட்பம் வியந்திட க்கூடியதாக இருக்கிறதல்லவா ! இப்படிச் செய்வ தனால் பனாட்டானது நீண்ட நாட்களுக்குப் பழுதுபடாமல் பாதுகாப்பாக வைத்திட முடிந்தது எனலாம்,


பனை ஓலைக் கூடைகளில் பனாட்டினைப் பொதி செய்யும் பொழுது ஒரு நுட் பம் கையாளப்பட்டது. அது என்ன தெரியுமா ? பனாட்டுத் தட்டுக்களின் உட்புற மாகவும் வெளிப்புறமாகவும் உப்புத்தூளினைத் தூவுவதேயாகும்,தூவப்பட்ட உப்பானது பனாட்டிலிருக்கும் ஈரப்பதனை உள்ளே இழுத்துவிடும். அது மட்டு மல்லாமால் பனாட்டுடனும் கலந்தும்விடும். உப்பு ஈரப்பதனைக் கூடாமல் பாது காப்பாக இருப்பதுடன் பனாட்டுடன் கலந்து அதில் காணப்படும் காறல் சுவையினையும் குறைப்பதற்கும் உதவியாக நின்று பனாட்டின் சுவையினை மெருகுபடுத்தும் சுவையூட்டியாகவும் அமைகிறது என்பதும் மனங்கொள்ளத் தக்கதா கும்.

நவநாகரிகத்தில் மிதப்பார் பனாட்டினை ஏளனமாக நோக்கினாலும் – பனாட்டின் மகத்துவம் மக்களிடையே நிறைந்தே இருக்கிறது என்பதைக் கட்டாயம் சொல்லியே ஆக வேண்டும். இரசாயனக் கலவைகள் கலந்த வண்ண வண்ண மான பொருட்களை வாங்கியுண்பதால் பல விளைவுகள் வருகின்றன என் பதை அறிந்தும் , அறியாமலும் பலர் சுவைப்பதற்குத் துடித்து நிற்பதையே தற் பொழுது கண்ணாரக் காணமுடிகிறது. ஆனால் உடலின் ஆரோக்கியத்து ஒத் துவராத எந்தவித இரசாயனக் கலவைகளுடனும் இணக்கம் வைக்காத , பனாட்டினை பாராமுகமாய் இருப்பதை விடுத்து அதனைச் சுவைத்தால் நல்ல ஆரோக்கியம் கிடைப்பதோடு எங்களின் பாரம்பரியத்துக்கும் மதிப்புக்கொடுப்பதாகவும், பலதொழிலாளர்களுக்கு உறுதுணையாகவும் அமையும் அல்லவா !

மற்றைய இனிப்பு வகைகளைச் சாப்பிடுவதால் எந்தவித நலன்களுமே விளைந்திடப் போவதில்லை. ஆனால் பனாட்டு அப்படியானது அல்ல என்பதை கவனத்தில் கொள்ளுதல் கட்டாயமாகும். பனாட்டினை நேரமறிந்து உண்பத னால் , கரப்பான் வியாதி, கிரந்தி, அழுகிய கிரந்தி, ஆகிய வியாதிகள் அகல்கி ன்றன. அதுமட்டுமன்றி சொறி, தேமல், நீர்க்கடுப்பு, தலைக்கனம், பித்த வாயுவினால் ஏற்படுகின்ற தீமைகள் யாவுமே நீங்குகிறது. மேலும் குடற்புண் , மலச்சி க்கல் ஆகியவற்றை நீக்கவும் உதவி நிற்கிறது என்பது யாவரும் மனமிருத்த வேண்டிய விடயமாகும்,

# நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு செலுத்த வேண்டிய பணம் இம்மாத இறுதிக்குள்

## பிரசன்ன ரணதுங்க உறுதி



கொவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு செலுத்த முடியாத 1989.75 மில்லியன் ரூபா பணம் இந்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அந்த தொகையை செலுத்துவதன் மூலம் கொவிட் தொற்றுநோய் காரணமாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு செலுத்தாமல் இருந்த அனைத்து கட்டணங்களும் முழுமையாக செலுத்தப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு மேலதிகமாக, இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளுக்காக நிர்மாண ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய 1112.57 மில்லியன் ரூபா பணத்தையும் இந்த வருட இறுதிக்குள் முழுமையாக வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பொருளாதார நெருக்கடி மற்றும் கொவிட் தொற்றுநோய் காரணமாக இலங்கையின் கட்டுமானத் தொழில் கடுமையான பின்னடைவைச் சந்தித்தது, இதன் காரணமாக, கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஜனாதிபதியின் விசேட கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து, இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக நிதியமைச்சின் செயலாளர் தலைமையில் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

இதன்படி, இது தொடர்பான கொடுப்பனவு நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், நகர அபிவிருத்தி மற்றும்வீடமைப்புஅமைச்சு அதற்கேற்ப நிலுவைத் தொகைகளை செலுத்து-வதை நிறைவு செய்யும்.

இதேவேளை, நிர்மாணத்துறைக்காக தனியான அபிவிருத்தி வங்கியெ-ான்றை நிறுவுவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. திறைசேரிக்கு இந்த யோசனை சம்பந்தமாக எண்ணக்கருப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், கிடைக்கும் பதில்களின் அடிப்படையில் புதிய வங்கி ஸ்தாபிக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (05)

# புனரமைக்கப்பட்ட மகா பனிக்கட்டியாவ குளம் மக்கள் பாவனைக்கு ஞாயிறன்று கையளிப்பு







திருகோணமலையில் மீள்புனரமைக்கப்பட்ட மகாபனிக் கட்டியாவ குளம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் திறந்து வைக்கப்பட்டது.

37.45 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த குளம், திருகோணமலை மாவட்ட விவசாயிகளுக்கு கணிசமான நன்மைகளை வழங்கும் வகையிலும் விவசாய பாவனைக்கான நீர் வினைத் திறனைமேம்படுத்தும்வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் நாடாளு மன்ற உறுப்பினர் கபில அத்து கோரல கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# மிஹிந்தலை புனித பூமியிலிருந்து படையினரை நீக்கும் முடிவு தவறு

## சஜித் கூறுகிறார்



மிஹிந்தலை புனித பூமியில் சந்தேகத்துக்கு உரிய முறையில் நடமாடிய இருவரைக் கைதுசெய்த காரணத்தால், பொலிஸ், இராணுவம் மற்றும் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் என பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த 250 உத்தியோகத்தர்களை அங்கிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பது பாரிய குற்றமாகும்.

அது தொடர்பில் எமது கவலையைத் தெரிவிக்கிறோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மிஹிந்தலை புனித பூமியில் இருந்து இராணுவத்தினரை அகற்றிக்கொள்ள தீர்மானித்துள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்து பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

மிஹிந்தலை புனித பூமியை பாதுகாக்கும் கடமையில் பொலிஸார் இராணுவத்தினர் மற்றும் சிவல் பாதுகாப்பு படையினர் பாரிய சேவையை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால்இவர்களுக்குத்தெரியாத 2 பேர் அங்கு இரகசியமாக மறைந்திருப்பதாக பொலிஸாரே கைது செய்துள்ளனர். மஹாநாயக்க தேரருக்கும் தெரியாமலே இந்த 2 பேரும் அங்கு தங்கி இருந்துள்ளனர்.

இவ்வாறு இரகசியமாக மறைந்திருந்த 2 பேரைக் கைது செய்தமைக்காக, புனித பூமியில் சேவை செய்துவந்த 250 பாதுகாப்பு படையினரையும் அங்கிருந்து நீக்கிக்கொள்வதாக இராஜாங்க அமைச்சர் தெரிவிக்கின்றமை மிகவும் மோசமான கூற்றாகும்.

அதேநேரம் இனம் தெரியாத 2 பேர் இருப்பதாகத் தெரிவித்து, சந்தேகத்தின் பேரில் அவர்களைப் பாதுகாப்பு பிரிவினர் கைது செய்து விசாரணை நடத்து-வதாகத் தெரிவிக்கும்போது, 250 பேரையும் அங்கிருந்து நீக்கிக்கொள்வதாகத் தெரிவிப்பது பாரிய குற்றமாகும்.

அரசமைப்பினூடாக பௌத்தம்காக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதுதான் இந்த நாட்டின் சட்டம். அதனை மறந்து செயற்படக்கூடாது. எனவே பிழையானகருத்தைத்தெரிவித்து மோசமான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறேன். நாட்டையும் மக்களையும் காப்பாற்றியமுப்படையினருக்கு களங்கம் வரும் வகையில் செயலாற்ற வேண்டாம். -என்றார். (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

தொடர்புகளுக்கு: 0777 43 5557

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
DESSERT
Ice Cream Cup - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

## மீனவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படவுள்ளது. அத்தோடு கடற்றொழில்துறைநிபுணர்களுடன் கலந்துரையாடி உரிய திருத்தங்களைமேற்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

நாடுமுழுவதும்கடல்சூழ்ந்துள்ள போதிலும் நாட்டிற்கு கருவாடு இறக்குமதி செய்வது தொடர்பில் எதிர்க்கட்சிகள் கேள்வியை எழுப்பியுள்ளன. வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கருவாடுகள் மொத்தமாக வைத்தியசாலைகளுக்கும் இராணுவத்திற்கும் வழங்கப் படுகின்றது. உள்நாட்டில்கிடைக்கும் சூடை போன்ற மீன்கள் அதற்கு ஏற்றதல்ல.

உள்நாட்டு மீன்கள் குறைவாக இருக்கும் ஏப்ரல் முதல் ஜூலை வரையான மாதங்களில் மீன்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும். கடந்த ஜனவரி முதல் செப்டெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில், 293,880 மெற்றிக் தொன் மீன் கிடைத்துள்ளது. மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மீன்பிடிபடகுகளுக்குத்தேவையான எரிபொருள் கிடைக்காமை மற்றும் மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பு என்பன பிரதான பிரச்சினைகளாகும்.

சிறிய மற்றும் நடுத்தர மீனவ சமூகத்திற்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இந்திய மீன்பிடி படகுகள் அத்துமீறி; நாட்டுக்குட்பட்ட கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடும் நிலைமைகள் நீடிக்கின்றன. இந்த விடயத்தை நாடுகளுக்கு இடையேயான அடிப்படையில் தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்று (நேற்று முன்தினம்) கூட இந்த ரோலர் கப்பல்கள் அனுமதியின்றி நமது கடலுக்குள் நுழைந்துள்ளன. அந்தநபர்கள்கைது செய்யப்பட்டனர். அப்போதுகடற்படை தமக்கு எதிராகச் செயற்படுவதாக பொய்ப் பரப்புரை செய்கின்றனர்.

இதுதொடர்பாகதமிழகஅரசுக்கு உண்மை நிலையை தெரிவிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தோம். அத்துமீறுபவர்களை கைது செய்ய வேண்டி நேரிடும் என்று அவர்களிடம் விளக்கினோம். தமிழகத்திற்குச் சென்று அங்குள்ள அரசியல்வாதிகளுடன் கலந்துரையாடி இந்தப் பிரச்சினையைத் தீர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## யாழ். பல்கலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் முன்னெடுத்தபோது தமிழீழ விடுதலைப்புலிக ளின் பாடல் இசைக்கப்பட்டமை மற்றும் மாணவர் ஒன்றிய செயற்பாடுகள், மாணவர் ஒன்றியம் நடத்திய ஊடக சந்திப்புகள் என்பவை தொடர்பிலேயே விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## இமயமலைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் மற்றும் இலங்கைத்தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் ஆகியோரும் பங்கேற்றிருந் தனர்.

இச்சந்திப்பு தொடர்பில் சுமந்திரன் தெரிவித்ததாவது:

உலகத் தமிழர் பேரவை மற்றும் பௌத்த தேரர்கள் கூட்டாக வருகை தந்து நாகர்கோட் பிரகடனம் அல்லது இமயமலைப் பிரகடனத்தினை கையளித்துள்ளனர்.

முக்கியமாக, நான்கு பீடங்களினது பௌத்த பீடாதிபதிகளும் இமயமலைப் பிரகடனம் தொடர்பில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தினர் என்று கூறப்பட்டது. இதுவொரு பெரும் திருப்புமுனையாகும்.

இந்த ஆவணத்திலே இரண்டு விடயங்கள் முக்கியமாகச் சொல்லப்பட்டுள்ளன. முதலாவதாக, நாட்டில் அதிகாரப்பகிர்வு செய்யப்பட வேண்டும் என்ற விடயம் சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ள கூற்றில் ஒற்றையாட்சியை விடுத்தே அவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாவதாக, இந்த நாட்டில் தீர்வுக்கான முயற்சிகள் இடம்பெறுகின்றபோது, அதனை பௌத்த தேரர்கள்தான் குழப்பிய வரலாறுகள் உள்ளன. இதனால் தமிழ் மக்கள் மத்தியில் அவர்கள் மீதான நம்பிக்கை இழக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல புலம்பெயர் தமிழர்களின் தரப்பினருக்கும் தீர்வு கிடைப்பதில் விருப்பமின்மை காணப்படுவதாகக் காட்டப்படுகின்றது. ஆகவே தற்போது கையளிக்கப்பட்ட ஆவணத்தில் தீர்வுக்கான உரையாடலின்போது சமஷ்டி, அதிகாரப் பகிர்வு விடயங்களை தவிர்த்தே வடிவமைத்துள்ளார்கள் என்றார்.

இதேவேளை, உலகத்தமிழர் பேரவையின் ஊடகப்பேச்சாளர் சுரேன்சுரேந்திரன் தெரிவித்ததாவது:

மக்களுடன் மக்களைத் தொடர்புபடுத்துவதன் ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயல்வது முக்கியமானதொரு விடயமாகும், பல்வேறு சந்தர்ப்பங்களில் அவ்விதமான முயற்சி எடுக்கப்பட்டிருக்க வேண்டும். எனினும்காலம்தாழ்த்திஅந்தமுயற்சி எடுக்கப்படுவது வரவேற்கத்தக்கது என்று சம்பந்தன் குறிப்பிட்டார்.

அதுமட்டமன்றிஇந்தமுயற்சியின் ஊடாக அரசமைப்பு மாற்றத்தின் ஊடாக இனப்பிரச்சினைக்கான தீர்வினை ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரங்கள் பகிரப்படுவதன் ஊடாகத் தீர்க்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேபோன்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளோம் என்றார்.

இமயமலைப்பிரகடனக்காரர்கள், நேற்று முன்னதாக பேராயர் கர்தினால் மல்க்கம் ரஞ்சித்தைச் சந்தித்து தமது பிரகடனத்தைக் கையளித்தார்கள். அதேபோன்று கொழும்பில் உள்ள சிவில் சமூகத்தினரையும் சந்தித்துப் பேசியுள்ளார்கள். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவையும் அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பிரகடனத்தைக் கையளித்துள்ளார்கள். நாடாளுமன்றத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் ஆகியோரையும் சந்தித்து தமது முன்னெடுப்புக் குறித்துக் கலந்துரையாடினார்கள்.









## பல்கலைக்கழங்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயிற்சித் துறையின் மீது அந்தப் பொறுப்புச் சார்ந்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

தொழிற்பயிற்சி கல்வித்துறையின் புதிய மாற்றத்திற்கு தனியார் துறையினரின் ஆதரவு வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்நாட்டின்முழுகல்விமுறையையும் மறுசீரமைப்பதற்கு தேவையான சட்டங்கள் விரைவில் கொண்டு வரப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

என்.எஸ்.பி.எம். பல்கலைகழக பட்டமளிப்பு விழாவில் 176 பேருக்கு பட்டம் வழங்கப்பட்டதோடு, சிறப்பு திறன்களை வெளிப்படுத்திய 6 பேருக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன. அங்கு மேலுத் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததாவது:

பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறும் அனைவருக்கும் தொழில் கிடைக்கும் வகையில் பல்கலைக்கழக கல்வி முறை மாற்றியமைக்கப்படவேண்டும். இன்றுஅரசபல்கலைக்கழகங்களில் இணையும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. நிதி ஒதுக்குவதில் உள்ள சிக்கல்தான் அதற்குக் காரணம். ஆனால் மற்ற நாடுகள் இந்தப் பிரச்சினையை வெற்றிகரமாக எதிர்கொண்டுள்ளன.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பிரகடனமும், 'அனைவருக்கும்கல்வியைபெறும்உரிமை வழங்கப்படவேண்டும்' என்று கூறுகிறது. அதன்படி, ஒவ்வொரு நாட்டிலும் இதற்காக அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டுள்ளன. இலங்கை என்ற வகையில் நாம் இப்போது அந்தப் பணிக்குச் செல்லத் தயாராக உள்ளோம்.

அதற்கமைய இந்நாட்டு பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையை இரண்டு அல்லது மூன்று மடங்கினால் அதிகரிக்க நாம் எதிர் பார்க்கிறோம். அதனால் புதிய தொழில்நுட்ப கல்வியுடன் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் பட்டங்களை பெற்றுக் கொள்ளும்வாய்ப்புமாணவர்களுக்கு கிடைக்கும்.இலங்கையைபல்கலைக் கழங்களுக்கானகேந்திரநிலையமாக மாற்றியமைக்க வேண்டும். 2030 ஆம் ஆண்டளவில் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆங்கில அறிவை பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்க எதிர்பார்க்கிறோம். அதேபோல் ஏனைய மொழி அறிவிலும் தன்னிறைவான மாணவச் சமூகத்தைகட்டியெழுப்பவேண்டும்.

அதேபோல் தொழில் பயிற்சி நிறுவனங்களை ஒன்றிணைத்து தொழில் பயிற்சி பல்கலைக்கழங்களை நிறுவ எதிர்பார்ப்பதோடு, தொழில் வாய்ப்புக்களை இலக்கு வைத்த புதிய பாடத்திட்டங்களைஅறிமுகப்படுத்தவும்எதிர்பார்க் கிறோம். அதற்குதனியார் வர்த்தகச் சங்கமும் ஒத்துழைப்பு வழங்க முன்வந்திருப்பதால் அடுத்த வருடத்திலிருந்து இத்திட்டத்தை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம்.

அதனையடுத்து நாட்டின் கல்வித்திட்டத்தில் முழுமையான மாற்றத்தை ஏற்படுத்த அவசியமான சட்டங்களை உருவாக்க எதிர்பார்ப்பதோடு, அதற்கமைய பல்கலைக்கழக கல்வி மற்றும் தொழில் பயிற்சிக் கல்வியை நாட்டின் முன்னேற்றத்திற்காக பயன்படுத்திகொள்ளும் வேலைத்திட்டம் அடுத்த வருடத்திலிருந்து ஆரம்பிக்கவுள்ளோம். நாட்டின் முன்னேற்றத்திற்கு அறிவு அவசியம். அதற்கான கல்வி முறைமையை உருவாக்க வேண்டும். தற்போது நாம் இடைநிலை வருமானம் ஈட்டும் நாடு. நாம்தொடர்ந்தும்இந்நிலையில் இருக்க வேண்டுமா? உயர் வருமானப் பொருளாதாரமாக மாற்றமடையவேண்டுமாஎன்பதை தீர்மானிக்க வேண்டும். நாம் அனைவரும் அந்த பயணத்தை தொடர வேண்டும். அதற்குரிய மனித வளத்தை கட்டமைப்பதற்கு தகுந்தகல்வியைவழங்கவேண்டும் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# மீன்பிடித்துறையில் கௌரவமான தொழிலை ஊக்குவிப்பதற்கான வரைவு விதிமுறைகள்!



நாட்டின் மீன்பிடித்துறையில் கௌரவமான தொழிலை ஊக்குவிப்பதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பை மேலும் மேம்படுத்தும் வகையில் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் மீன்பிடித்துறையில் பணியாற்றுதல் தொடர்பான சமவாயம் 2007 தொடர்பான வரைவு விதிமுறைகள், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனு நாணயக்ககார, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிராந்த டி சில்வா, ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீபன்ஸ், இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் பணிப்பாளர் திருமதி சிம்ரின் சிங் ஆகியோருக்கு கையளிக்கப்பட்டது.

ஒத்துழைப்பு மற்றும் உரையாடல்களை வளர்ப்பதில் குறிப்பிடத்தக்க மைல் கல்லாக சி188 நுண்ணறிவு மன்றமும் இடம் பெற்றது. உலகளாவிய ரீதியில், கடற்றொழில் சவால்மிக்கதொன்றாகும். சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தால் உருவாக்கப்பட்ட சி188 சர்வதேச தொழில் நியமம் உலகளாவிய ரீதியில் கடற்றொழில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு, கௌரவமான பணிச் சூழ்நிலைகளை உறுதி செய்யும் அதே வேளை தரநிலைகள் மற்றும் ஒழுங்குமுறைகளையும் ஏற்படுத்துகின்றது. இது கடற்றொழில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்கள் குறித்து தரநிலைகள் - வேலை நேரங்கள், தொழில் பாதுகாப்பு மற்றும் பணியாளர்களின் சுகாதாரம், பணி நிமித்தம் படகுகள், கப்பல்களில் வாழ்தல் போன்ற பல அம்சங்களை உள்ளடக்கும்.

இலங்கையைப் பொறுத்தவரை கடற்றொழில் துறை, உணவு பாதுகாப்பு, போஷாக்கு, வணிகம், வேலைவாய்ப்பு மற்றும் ஏற்றுமதி வருமானம் ஆகியவற்றில் முக்கிய பங்களிப்பை செலுத்துகின்றது. இத்துறை பொருளாதார நெருக்கடிகளால் அதிகம் பாதிக்கப்பட்ட துறைகளில் ஒன்றாகவும் விளங்குகின்றது.

நாட்டின் கடற்றொழில் துறையை வலுப்படுத்துவதற்கும், கண்ணியமான வேலைசூழ்நிலைகளைமேம்படுத்துவதற்கும் அரசாங்கத்தின் அர்ப்பணிப்பைக் குறிக்கும் இந்த வரைவு விதிமுறைகள, இலங்கை சி188 சமவாயத்தை அங்கீகரிப்பதற்கான பயணத்தில், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சும் கடற்றொழில் அமைச்சும் ஒன்றிணைந்து கூட்டு அமைச்சரவை பத்திரமொன்றைச் சமர்ப்பிபதற்கான முக்கிய ஆவணமாக செயற்படும்.

நிகழ்வில் உரையாற்றிய, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனு நாணயக்கார, இலங்கை சி188 சமவாயத்தை உறுதிசெய்வது குறித்து வலுவான ஆதரவை தெரிவித்ததோடு, 'மீனவர்களுக்கு கண்ணியமான வேலையை வழங்குவது என்பது சட்ட கடமை மட்டுமல்ல, ஒரு தார்மீக கடமையும் கூட. இது மீனவர்கள் உட்பட இலங்கையின் தனியார்துறைஊழியர்களுக்குஒருவலுவான சமூக பாதுகாப்பு அமைப்பை உருவாக்குவதற்கான அமைச்சின் பெரிய முயற்சிகளின் ஒரு பகுதியாகும். - என்று தெரிவித்தார். அனைத்து பங்குதாரர்களின் ஆதரவுடனும் இலங்கை சி188 சமவாயத்தை இறுதி செய்து உறுதிப்படுத்துவதில் தாம் நம்பிக்கை கொள்வதாக கௌரவ கடற்றொழில்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். 'மீனவர்களுக்கு அவர்கள் பெற வேண்டிய உரிமையும் பாதுகாப்பும் வழங்கப்பட வேண்டும். கடற்றொழிற்துறையின் கௌரவமான வேலைத் திட்டத்தை அமைச்சு முழு மனதுடன் ஆதரிக்கிறது' எனவும் அவர் மேலும் தெரிவித்தார். சி188 ஐ உறுதிப்படுத்துதல் மற்றும் இணக்கம் வேலை நிலைமைகளை மேம்படுத்துவதில் மட்டுமல்லாமல், கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில், தொழிலாளர் தக்கவைப்பை எளிதாக்குவதில், துறையின் உலகளாவிய போட்டித்தன்மையை மேம்படுத்துவதன் மூலம் இலங்கைக்கு கணிசமான பொருளாதார இலாபத்தையும் ஈட்டும். இது நாட்டின் கடற்றொழில் துறையின் நீண்டகால வளர்ச்சி மற்றும் நிலைபேறான தன்மைக்குபேண்தகுஅடித்தளத்தையும்அமைக்கிறது. 'அனைத்து இலங்கையர்களுக்கும் செழிப்பான பொருளாதார வாய்ப்புகளை மேம்படுத்துவது ஆஸ்திரேலியாவின் இலங்கைக்கான அபிவிருத்து ஒத்துழைப்பின் முக்கிய அம்சமாகும். மீன்பிடித்துறை என்பது அபிவிருத்தி, கௌரவமான வேலை உருவாக்கம் என்பவற்றை விருத்திசெயும் ஒரு முக்கிய இயக்கியாகும் - நீல நண்டு, இராட்சத இறால் வகை மற்றும் கடல் அட்டை பெறுமதிச்சங்கிலிகளில் முதலீடுகள் வாழ்க்கைத்தரத்தையும் சம்பந்தப்பட்ட துறைகளையும் உயர்த்துவதில் பலன்களைப் பெற்றுள்ளன. அரசாங்கம் சி188 ஐ உறுதிப்படுத்துவதற்கான தனது பயணத்தில் முன்னேறும் என்று நாங்கள் நம்புகிறோம்' என்று இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர்போல்ஸ்டீபன்ஸ்தெரிவித்தார். வரைவு விதிமுறைகளைப் பற்றி தீர்க்கமான விவரங்களைப் பெற, திறந்த விவாதங்களில் ஈடுபட, கண்ணோட்டங்களைப் பகிர்ந்து கொள்ள, சி188 ஐ உறுதிப்படுத்துவதற்கான இலங்கையின் பயணத்தில் முன்னேறும் வழியைப் புரிந்து கொள்ள பங்குதாரர்களுக்கு நுண்ணறிவு மன்றம் ஒரு தளத்தை வழங்கியது. இந்த சமவாயத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த ஐஎல்ஓவின் இலங்கை மற்றும் மலைதீவுகள் நாடுகளுக்கான பணிப்பாளர் திருமதி சிம்ரின் சிங்,

'இலங்கைதனதுபொருளாதாரமீட்சிமற்றும் தாங்குதிறனைவலுப்படுத்தநடவடிக்கைகளை கையெடுக்கும் இக்காலகட்டத்தில், சி188 ஐ உறுதிப்படுத்துவதானது தொழிலாளர்களுக்கு கண்ணியத்தையும் பாதுகாப்பையும் வழங்குகிறது, மேலும் தொழில் துறை வளர்ச்சிக்கும் இலாபத்திற்கும் இதுவொரு பொன்னான வாய்ப்பாகும். கடற்றொழில் அமைச்சு மற்றும் தொழிலாளர் அமைச்சு ஆகிய இரு அமைச்சுகளினதும் அர்ப்பணிப்பு பாராட்டத்தக்கது. ஐஎல்ஓ வானது, சி188 ஐ உறுதிசெய்வதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என்று கூறினார். கடற்றொழில் அமைச்சும் தொழில் அமைச்சும் இணைந்து சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் தொழில்நுட்ப ஆதரவுடனும் சி188 உறுதிப்படுத்தும் செயல்முறையை முன்னெடுக்கிறது. சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனமானது தொழிலுலகிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அமைப்பாகும். இது சர்வதேச தொழில் நியமங்கள் அமைக்கவும் வேலைவாய்ப்பு தொழிலாளர் உரிமைகள், மற்றும் சமூக பாதுகாப்பு தொடர்பான விடயங்களை தீர்த்துக்கொள்ள சமூக உரையாடலில் ஈடுபடுகின்றது, தொழில்நுட்ப உதவிகளை வழங்குகின்றது. சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனமானது சமூக நீதியை முன்னேற்றுவதற்கும் உலகளாவிய ரீதியில் கண்ணியமான தொழில்வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான நோக்கங்களை அடையவும் அரசாங்கங்கள், தொழில் வழங்குநர்கள், தொழிலாளர் அமைப்புகள் மற்றும் பிற பங்குதாரர்களுடன் நெருக்கமாக இணைந்து பணியாற்றுகின்றது. (05)



# 8 அம்சக் கோரிக்கையை முன்வைத்து மனித உரிமைகள் தினப் போராட்டம்




மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வடமாகாண சமூக மட்ட அமைப்புக்களால், 8 அம்சக் கோரிக்கைகளைமுன்வைத்து யாழ்.மாவட்டசெயலகத்திற்குமுன்பாக கவனவீரப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது 'பயங்கரவாத தடைச்சட்டத்தை உடன் நீக்குதல்,கொக்கிளாய் மனித புதைகுழிக்கு நீதியான விரைவான விசாரணையை முன்னெடுத்தல், மனித சித்திரவதைகளை நிறுத்துதல், பெண்களுக்கெதிரான வன்முறையை நிறுத்துதல், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான பொறுப்புக்கூறலை விரைவுபடுத்துதல், பூநகரிப் பிரதேசத்தில்பொன்னாவெளிப்பகுதியில் சுண்ணக்கல் அகழ்வையும், சீமெந்து தொழிற்சாலை அமைப்பதையும் உடன் நிறுத்துதல், மன்னார்தீவில் கனியமண் அகழ்வை உடன் நிறுத்துதல், மன்னார்தீவில் காற்றாலை மின்சாரத்தை அமைக்காது, அதனை வேறுபகுதிக்கு மாற்றுதல் என எட்டு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# மன்னாரில் நேற்று திங்கள் கவனவீர்ப்புப் போராட்டம்!




சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி மன்னாரில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டமொன்றுமுன்னெடுக் கப்பட்டது.

மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங் களுக்கான இணையத்தின் இணைப்பாளர் அருந்தவநாதன் நிரோஜன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கவனவீர்ப்பு போராட்டத்தில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.இதன் போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்' மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்ற அரச காணிகள் கொள்ளை தொடர்பாக நீதியைபெற்றுத்தாருங்கள்,பணக்காரர்களுக்காக தாரை வார்க்கப்படும் மேய்ச்சல்தரைகள், கடற்கரையோரம், காட்டு நிலங்கள் தடுத்து நிறுத்துங்கள்' உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்.(05)

# மாவா போதைப்பொருளுடன் யாழ். நகரில் ஒருவர் கைது!



யாழ்.நகரில் பெருமளவான மாவா போதைப்பொருளுடன் ஒருவர் நேற்று (திங்கட்கிழமை) பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களை குறிவைத்து போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டுவந்த 33 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது 3 கிலோ 686 கிராம் நிறை கொண்ட மாவா போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# தேசிய மீன ஒத்துழைப்பு இயத்தினரும் மனித உரிமைகள் நாள் போராட்டத்தில்



மனித உரிமைகள் மீறல்களை எதிர்த்து யாழில், நேற்று (திங்கட்கிழமை) தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வட மாகாண பெண்கள் குரல் அமைப்பினரால் கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் ஆகியோரிடம் மகஜரொன்றும்கையளிக்கப்பட்டது.

குறித்த மகஜரில், இலங்கையில் மனித உரிமை பாதுகாப்பு இன்மையே இங்கு வாழ்கின்ற மக்கள் என்ற ரீதியில் தொடர்ச்சியாக நாங்கள் எதிர் நோக்கி வருகின்றோம். குறிப்பாக நீரியல்வளங்கள், நிலவளங்கள், சுற்றாடல்போன்றவளபகிர்வுகளில் அரசாங்கம் மற்றும் மக்களுக்கு இடையிலே உள்ள சமூக ஒப்பந்தம்மீறப்படுவதுடன் அதன் மூலம் மனித உரிமை மீறல்கள் நடைபெறுகின்றன.

அதிலும் வட பகுதியில் தேசிய பாதுகாப்பு என்ற ரீதியில் மக்களின் காணிகள் விடுவிக்கப்படாமை மற்றும் காணி அபகரிப்பு, இராணுவமயமாக்கல், இராணுவ சோதனை தடுப்பு அரண்கள், மக்கள் மீள்குடியேற்றப்படாமை போன்றவற்றால்இங்குவாழ்கின்ற மக்களாகிய நாம் பெரும் சவாலையே எதிர்நோக்குகின்றோம்.

தற்காலத்தில் பொருள்களின் விலைஅதிகரிப்பு,எரிபொருள்களின் விலை அதிகரிப்பு, சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை, இந்திய மீனவர்கள் எமதுகடற்பரபில் மீன்பிடியில் ஈடுபடுகின்றமை, பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதாரம், போதைப் பொருள் பாவனை, சமுர்த்தி கொடுப்பனவுகள் சரியான முறையில் கிடைக்கப்பெறாமை போன்ற சவால்களையும் மக்களாகிய நாம் எதிர்நோக்குவதுடன் நாட்டின் பொருளாதாரக் கொள்கை, நாட்டின் புதிய சட்ட மற்றும் சட்ட மூலங்கள் சர்தேச உடன்படிக்கைகள்மூலம்வடபகுதி மக்களாகியநாம்பலஇன்னல்களை எதிர் நோக்குகின்றோம்.

முல்லைத்தீவு மாவட்ட குருந்தூர் மலைவிவகாரம், திட்டமிட்ட மாகாவலி குடியேற்றங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் தையிட்டிதிஸ்ஸவிகாரை போன்ற பல்வேறு பிரச்சினைகளை வட மாகாண பெண்கள் என்ற ரீதியில் எதிர்நோக்குகின்றோம். ஆகவே மேற்கூறப்பட்ட பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும். - இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் செயலிழந்த பகுதி இயங்க தொடங்கியது



நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் செயலிழந்திருந்த மின் உற்பத்தி இயந்திரம் ஒன்று திருத்தப்பட்டதன் பின்னர் நேற்று மீண்டும் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் மூன்று மின் உற்பத்தி இயந்திரங்களும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் செயலிழந்த நிலையில் காணப்பட்டமையால்அவற்றை பழுதுநீக்கும்பணிஉடனடியாக ஆரம்பிக்கப்பட்டது.

இரண்டு மின் உற்பத்தி இயந்திரங்கள் செயலிழந்திருந்த நிலையில் சனிக்கிழமை மின்சாரத் தடை காரணமாக மற்றைய மின் உற்பத்தி இயந்திரமும் செயலிழந்துள்ளதாக இலங்கை மின்சாரசபைதெரிவித்துள்ளது.

அதன்படி, பழுது நீக்கும் பணிக்கு பின், செயலிழந்த நிலையில் இருந்த மின் உற்பத்தி இயந்திரம் ஒன்று, நேற்று இயக்கப்பட்டு, மின் இணைப்புடன் இணைக்கப்பட்டது.

நீர் மின் உற்பத்தி தற்போது மும்முரமாக நடைபெற்று வருவதால் தேசிய மின்சார விநியோகத்திற்கு இந்த நிலைமை தடையாக இருக்காது என இலங்கை மின்சார சபை மேலும் தெரிவித்துள்ளது. (05)

# முல்லைத்தீவு பண்ணையாளர்களுக்கு பதிவுச் சான்றிதழ் பெற அறிவுறுத்தல்

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பண்ணையாளர்கள், தமது மாடுகளுக்கான பண்ணைப்பதிவுச்சான்றிதழைப்பெற்றுக்கொள்ளுமாறு முல்லைத்தீவு மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களபிரதிப்பணிப்பாளர்கிருஜகலாசிவானந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

பண்ணையாளர்கள்தமதுமாட்டுப்பண்ணைகளை பதிவுசெய்ய வேண்டியதும் தங்களால் வளர்க்கப்படும் சகல மாடுகளுக்கும் காதுப்பட்டி பொருத்துதலும் மிக முக்கியமானது.

இலங்கையிலுள்ள பண்ணைகளில் மாடுகளின் பண்ணைகள்கட்டாயமாகபதிவுசெய்யப்படவேண்டும் என்பது 2008 ஆம் ஆண்டே அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் பண்ணையாளர்கள் இதில் ஆர்வமற்று இருந்து வருகின்றனர்.

தற்போது ஒன்லைன் மூலமும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக விலங்குகளுக்கு காது இலக்கம் பொருத்தப்பட்டு பண்ணைகள் பதிவு செய்வதால் 'நாட்டிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கையை சரியாக கணிக்க முடிவதோடு, கால்நடைகள் களவாடப்படுதலையும் தடுக்க முடியும்.

அதுமட்டுமல்லாது கால்நடைகள் பற்றிய பல்வேறு தகவல்களை ஆராய்ந்து பண்ணைகளின் முன்னேற்றத்தையும் உற்பத்தியையும் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

மேலும் இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் இழப்புக்களுக்காக இழப்பீடுகளை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும். - இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போது Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியா பாதுகாப்பாக இருந்தால்தான் இலங்கையும் பாதுகாப்பாக இருக்கும்

## அடித்துக் கூறுகிறார் இந்திய உயர்ஸ்தானிகர்

இந்தியா பாதுகாப்பாக இருந்தால் இலங்கையும் பாதுகாப்பாக இருக்கும் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

இலங்கை எதிர்கொண்ட முன்னொருபோதும் இல்லாத நெருக்கடியின் போது வேகமாக வலுவான விதத்தில் செயற்பட்டபோது இந்தியா வேறு ஒரு நெருக்கடி விடயத்தில்; நடந்துகொள்ளவில்லை எந்த நாட்டிற்கும் உதவவில்லை என இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார். இ;ந்தியா இலங்கைக்கு உதவுவதற்காக சர்வதேச அளவிலும் உள்நாட்டிலும் தனது பங்களிப்பை வழங்கியது என குறிப்பிட்டுள்ள அவர், இந்தியாவின் தலைமைத்துவம் வலுவான இந்திய இலங்கை உறவுகள் குறித்து தெளிவாகவும் அர்ப்பணிப்புடனும் உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

சீனாகப்பல்கள் கொழும்பிற்கு வருவது குறித்த இந்தியாவின் கரிசனைகள் குறித்த கேள்விக்கு பதிலளித்துள்ள அவர், இந்தியாவும் இலங்கையும் இந்து சமுத்திரத்தில் உள்ளன. கடற்பயண சுதந்திரத்தை உறுதிசெய்வது இரு நாடுகளினதும் கூட்டு பொறுப்பு கடப்பாடு எனவும் தெரிவித்துள்ளார். உருவாகின்ற கடல்சார் சவால்களுக்கு இணைந்து தீர்வைக்காண வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பும் ஸ்திரதன்மையும் காணப்பட்டால் அமைதியும் வளமும் காணப்படும் எனவும் தெரிவித்துள்ள உயர்ஸ்தானிகர், எங்கள் நாடுகள் அமைந்துள்ள பகுதியில் பாதுகாப்பை உறுதி செய்வது எங்களின் கூட்டு பொறுப்பாகும். இந்த அர்த்தத்தில் இலங்கையினதும் இந்தியாவினதும் பாதுகாப்பு பிரிக்க முடியாதது பரஸ்பரம் ஒன்றிணைந்தது எனவும் குறிப்பி;ட்டுள்ளார். (05)

# கனடாவுக்கு சட்டவிரோதமாக தப்ப முயன்ற இளைஞன் கைது

சட்டவிரோதமாகத் தயாரிக்கப்பட்ட கடவுச்சீட்டை பயன்படுத்தி கனடாவுக்குத் தப்பிச்செல்ல முயன்ற இளைஞர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு குடியகல்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் யாழ்ப்பாணம், பருத்தித்துறை பிரதேசத்தை சேர்ந்த 24 வயதுடைய இளைஞராவார்.

இவர் ஞாயிற்றுக்கிழமை இரவு 07.10 மணியளவில் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானத்தின் மூலம் கத்தார் தோஹாவிற்கு செல்ல கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்துள்ளார்.

விமான அனுமதிக்கான சோதனையின் போது இவரது ஆவணங்கள் தொடர்பில் சந்தேகமடைந்த அதிகாரிகள் அவற்றை கட்டுநாயக்க விமான நிலையக் குடிவரவு குடியகல்வு எல்லைக் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

விசாரணையில் குறித்த கடவுச்சீட்டு போலியான தகவல்களுடன் தயாரிக்கப்பட்டமை உறுதி செய்யப்பட்டதையடுத்து குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த போலி கடவுச்சீட்டு தனது தாயின் சகோதரனான தனது மாமாவின் உதவியுடன் தரகர் ஒருவரிடத்தில் 40 லட்சம் ரூபா வழங்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இவர் இலங்கையில் இருந்து கத்தார் தோஹாவிற்கு சென்று அங்கிருந்து சட்டவிரோதமாக கனடாவுக்கு தப்பிச்செல்ல திட்டமிட்டிருந்ததாக விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, கைதுசெய்யப்பட்டவர் மேலதிக விசாரணைக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (05)

# கொழும்பு – பதுளை வீதியில் போக்குவரத்து மண் சரிவால் ஹாலி–எலவுடன் தடைப்பட்டது

கொழும்பு - பதுளை வீதியில் இயங்கும் அனைத்து நீண்ட தூர பஸ் சேவைகள் நேற்று (திங்கட்கிழமை) முதல் உடுவர, ஹாலி-எல வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை ஹாலி எல்ல உடுவர பகுதியில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக பதுளை - கொழும்பு வீதியின் ஒரு பகுதி கனரக வாகனங்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டது.

அதன்படி, அடம்பிட்டிய மாலிகதென்ன ஊடாக பண்டாரவளை வீதியை அந்த வீதியில் பயணிக்கும் கனரகவாகனங்களுக்கு மாற்று வீதியாக பயன்படுத்த முடியும். இலகுரக வாகனங்கள் பண்டாரவளை வீதியில் செல்ல முடியும் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (05)

# நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 80 ஆயிரம் கடந்தது

இவ் வருடம் இதுவரையான காலப்பகுதியில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 80 ஆயிரத்தை கடந்துள்ளதாக தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, இம்மாதம் 11 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 80,222 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இந்நிலையில், கொழும்பு மாவட்டத்தில் மட்டும் அதிகளவாக 16,948 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மாகாண ரீதியில் அதிகளவாக 37,216 டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர். அங்கு டிசம்பர் மாதத்தில் மட்டும் 3,734 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதேவேளை, இந்த வருடத்தில் இதுவரை டெங்கு நோயினால் 47 பேர் உயிரிழந்துள்ளனர்.

டெங்கு காய்ச்சலை தடுக்கும் வகையில், சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்கவும், நுளம்பு பெருகும் இடங்களை கண்டறிந்து அதனை அகற்றவும், சுகாதாரத்துறை அதிகாரிகள் மக்களை கேட்டுக் கொண்டுள்ளனர். (05)

# உர மோசடிக்கு ஏன் இன்னமும் நடவடிக்கை எடுக்கவில்லை?

## சஜித் கேள்வி

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஆட்சியில் இரசாயன உரங்கள் ஒரே நேரத்தில் தடைசெய்யப்பட்டு சேதன உரங்களைப் பயன்படுத்துவதற்கான தன்னிச்சையான முடிவால் நம் நாட்டிற்கு ஏற்பட்ட இழப்பு பாரியது என்றும், சில இழப்புகளை கணிப்பிட முடியாதுள்ளதாகவும், இது தொடர்பாக, கணக்காய்வாளர் நாயக திணைக்களம் முறைப்படி மேற் கொண்ட கணிக்காய்வு அறிக்கையை 2022 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து ஒரு வருடத்திற்கு மேல் கடந்திருந்தாலும், தற்போதைய ஜனாதிபதியோ அல்லது விவசாய அமைச்சரோ இது தொடர்பில் முறையான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்த ஊழல்கள் மோசடிகள் போலவே அரசாங்கத்தில் நிலவிவரும் ஊழல் முறைகேடுகளுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், எந்த வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாததால் மக்கள் விரக்தியடைந்துள்ளனர் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நிலையியற் கட்டளை 27 (2) இன் கீழ் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மலஉரமோசடிமூலம் மறுநாளே உரங்களை அதிக விலைக்கு இறக்குமதி செய்ததால் நாடு பெருமளவுபணத்தைசெலவழிக்க நேர்ந்ததாகவும், கணக்காய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாக கூறப்பட்டாலும் அது இன்னும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கணக்காய்வு அறிக்கையின் மூலம் நிரூபணமான இந்தக் குற்றச்சாட்டுகளை கோப் குழுவின் முன் கொண்டு வருவதில் காலதாமதம் ஏற்படுவதிலிருந்து இதற்குக் காரணமானவர்களை அரசாங்கம் பாதுகாக்கிறது என்பது புலப்படுவதாகவும், இனிமேலும் இத்தரப்பினரைப் பாதுகாக்காமல் மக்களுக்கு நீதியை நிலைநாட்டு மாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இங்கு தெரிவித்தார்.

அரசாங்கம் உர மானியம் வழங்கினாலும் தேயிலை கொழுந்து, இலவங்கப்பட்டை, காய்கறிகள் மற்றும் பழங்கள் போன்ற அனைத்து பயிர்களுக்கும் பயன்படுத்தப்படும் விவசாய கருவிகள், இயந்திரங்கள், உரங்கள் மற்றும் ஏனைய உற்பத்திப் பொருள்கள் மீது வற்வரியை விதித்துள்ளதாகவும், வற்வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், இது மக்களை நரகத்திற்கு இட்டுச் செல்லும் வற் வரி என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (05)

# ஜனாதிபதி தேர்தலில் நான் நிச்சயம் வெற்றிபெறுவேன்

## ஜனகரத்நாயக்க அபரிமித நம்பிக்கை



ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறுவேன் என பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கடந்த மே மாதம் நாடாளுமன்ற வாக்களிப்பின் மூலம் பதவி கவிழ்க்கப்பட்ட ஜானகரத்நாயக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போவதை உறுதி செய்துள்ளார்.

சனிக்கிழமை மின் துண்டிப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்த அவர் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் நிச்சயமாக வெற்றிபெறுவேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

டிசெம்பர் ஏழாம் திகதி எனது பிறந்த தினத்தன்று நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் அறிவிப்பை வெளியிட்டேன். நான் நிச்சயமாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்றேன் அது மாத்திரமன்றி நான் நிச்சயமாக வெற்றிபெறுவேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# போகம்பரைச் சிறைச்சாலை நட்சத்திர ஹோட்டலாக மாறும்

## திலும் அமுனுகம கூறுகிறார்

போகம்பரை சிறைச்சாலையை சர்வதேச ஐந்து நட்சத்திர ஹோட்டலாக மாற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு உள்நாட்டு முதலீட்டாளர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், வரலாற்றுச் சிறப்புமிக்க போகம்பரை சிறைச்சாலையில் அதன் வரலாற்றுப் பெறுமதியை நிலைநிறுத்தி ஹோட்டல் ஒன்று நடத்தப்படும் என இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, யால ஹில்டன்



ஹோட்டலை நிர்மாணித்து திறந்துவைத்த மெல்வா குழுவால் இந்தக் ஹோட்டலும் நிர்மாணிக்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, நகர அபிவிருத்தி அதிகார சபை போகம்பரை சிறைச்சாலை வளாகத்தை மறுசீரமைப்பதற்குத்; தொல்பொருள் திணைக்களத்திடம் அனுமதி பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானிய ஆட்சியாளர்களால் கட்டப்பட்ட போகம்பரை சிறைச்சாலை இலங்கையின் இரண்டாவது பெரிய சிறைச்சாலையாகப் பார்க்கப்படுகிறது.

மூன்று மாடியைக் கொண்ட இந்த சிறைச்சாலை ஒரே அடித்தளத்தில் கட்டப்பட்ட ஆசியாவிலேயே மிக நீளமான கட்டடமாகும். 138 ஆண்டுகள் செயற்பாட்டில் இருந்த கண்டி போகம்பரை சிறைச்சாலை கடந்த 2014 ஆம் ஆண்டு மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# ஹிக்கடுவையில் இடம்பெற்ற விபத்தில் கொழும்பைச் சேர்ந்த இளைஞன் சாவு

கொழும்பு - காலி பிரதான வீதியில் ஹிக்கடுவை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 27 வயதுடைய இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கவனக்குறைவாக மோட்டார் சைக்கிளைச் செலுத்தியதன் காரணமாக குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்து சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

விபத்திற்குள்ளாகி உயிரிழந்த இளைஞன் மேலும் இரு நண்பர்களுடன் மோட்டார் சைக்கிள்களில் ஹிக்கடுவை நோக்கி பயணித்துள்ளார்.

இதன்போது, உயிரிழந்த இளைஞன் தனது மோட்டார் சைக்கிளை கொழும்பிலிருந்து காலி நோக்கி செல்லும் பக்கமாக செலுத்தியுள்ளார்.

இதன்போது, இளைஞன் மோட்டார் சைக்கிள் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் ஹிக்கடுவை வெள்ள சந்தியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் மற்றும் மதில் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

இந்நிலையில், இளைஞன் பலத்த காயங்களுடன் கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் கொழும்பு 10 ஐ சேர்ந்தவராவார்.

இளைஞன் கவனக்குறைவாக வாகனத்தைச் செலுத்தியதால் விபத்து ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்து தொடர்பான விசாரணைகளை ஹிக்கடுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# அநுராதபுரம் வைத்தியசாலை கட்டட வளாகத்தில் தீப் பரவல்

## நோயாளர்கள் வெளியேற்றம்

அநுராதபுரம்போதனாவைத்தியசாலைக்குசொந்தமானமெத்சிறிசெவன கட்டட வளாகத்தில் நேற்று (திங்கட்கிழமை) தீ பரவியுள்ளது.

தீயைஅணைக்கஅநுராதபுரம் மாநகர சபையின் தீயணைப்பு பிரிவின் இரண்டு வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. தீ பரவல் ஏற்பட்டதையடுத்து கட்டட வளாகத்தில் இருந்த உள்நோயாளிகளைவெளியேற்றநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (05)

# பொத்கல ஓயாவில் நீராடியவர் மூழ்கி பரிதாபமாக உயிரிழப்பு

நமுனுகுலபிரதேசத்தில்பொத்கல ஓயாவில் நண்பர்களுடன் நீராடிக் கொண்டிருந்தவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என நமுனுகுல பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் மொனராகலை பிரதேசத்தை சேர்ந்த ஜெயக்குமார் திலக்ஷன்என்ற17 வயதுடையவராவார்.

இவர் தனது விடுமுறையை மாமா வீட்டில் கழிப்பதற்காக நமுனுகுல பிரதேசத்திற்கு வந்திருந்த நிலையில் தனது இரண்டு நண்பர்களுடன் நீராடச் சென்ற போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நமுனுகுல பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (05)

# பொலிஸ் தலைமையகத்தில் மீளமக்கள் நிவாரண தினம்

## 15ஆம் திகதி ஆரம்பம்

பொலிஸ் தலைமையகத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் மக்கள் நிவாரண தினத்தை மீள ஆரம்பிக்க பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தீர்மானித்துள்ளார்.

அதன்படி, பொது விடுமுறை தினங்கள் தவிர்ந்த அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் பொலிஸ்மா அதிபர் பொது நிவாரண தினம் காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நாடளாவிய ரீதியில் பொலிஸ் நிலையங்கள் மற்றும் பல்வேறு புலனாய்வு திணைக்களங்களுக்கு பொது மக்கள் சமர்ப்பிக்கும் முறைப்பாடுகளில், நடவடிக்கைஎடுக்கத்தவறியமை தொடர்பில் பதில் பொலிஸ் மாஅதிபரிடம்நேரடியாகமுறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது. (05)

# திடீர் மின் வெட்டு நேரத்தில் வீட்டினுள் நுழைந்து திருட்டு

நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்வெட்டில் கண்டி - யட்டிஹலகல பிரதேசத்தில் உள்ள வீட்டொன்றிற்குள் நுழைந்து திருடிய சந்தேகத்தில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம் இடம்பெற்று பத்துமணி நேரத்திற்குள் சந்தேகநபர் ஹலதெனிய பிரதேசத்தில் வைத்துகைதுசெய்யப்பட்டுதிருடப்பட்ட பொருள்களும் கைப்பற்றப்பட்டன எனப்; பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையில் திருடப்பட்ட தொலைக்காட்சி பெட்டி மற்றும் கிரைண்டர் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.12.2023இல் வெளியிடப்பெற்றது.